
51

# தமிழ்க் கலை



கோடை வெய்யிலிலே, குளிர் ஓடைக் கரையினிலே, ஓடும் குதிரையது, ஓய்ந்திருக்கும் நேரமிது.


| | | |
|---|---|---|
| கலை—5<br>நூல்-11 | 1—5—1948. | விலை<br>அணா 4 |

# தமிழ்க்கலை

## திங்கள் வெளியீடு

உள் நாடு:

| | |
|---|---|
| தனிப்படி | 0—4—0 |
| ஆண்டு வரி பொங்கல் மலருடன் | 3-8-0 |

வெளி நாடு:

| | |
|---|---|
| தனிப்படி | 0—5—0 |
| ஆண்டு வரி பொங்கல் மலருடன் | 5-0-0 |

தனிப்படிகள் சுதேசமித்திரன், ஹிகின்பாதம் ரெயில்வே புத்தகசாலைகளி லும், முக்கிய ஊர்களில் உரிமைப் பெற்ற விற்பனை யாளர்க ளிடமும் கிடைக்கும்.



## விளம்பரம்

ஒரு முறைக்கு

| | |
|---|---|
| வெளிப் பக்கம் (அட்டை) | ரூ. 100 |
| உள் பக்கம் ( ,, ) | 75 |
| சாதாரண பக்கம் | 50 |
| ,, ½ பக்கம் | 30 |

நீண்டகால விளம்பரத்துக்கு நேரில் எழுதவும்.



பொறுப்பாளர்:

'தமிழ்க் கலை'

34, வைத்தியநாத முதலிதெரு,

சென்னை 10.



# தமிழ்க்கலை

ஆசிரியர்

அ. மு. பரமசிவானந்தம் B.O.L., M.O.L.


*விரியும் அறிவு நிலை நாட்டுவீர் - அங்கு*
*வீழும் சிறுமைகளை ஓட்டுவீர்—பாரதி.*


திருவள்ளுவர் ஆண்டு ௧௯௭௯

1 — 5 — '48

கலை - 5 ⁂ நூல் - 11


## பொருளடக்கம்


| | |
|---|---|
| பாட்டுரிமை நாட்டுக்கு | 3 |
| சித்தூரின் தமிழ்ப் பகுதி | 5 |
| இதுவும் ஒரு வேலைதான் | 9 |
| அரசியல் அமைப்பு | 13 |
| தமிழ் வாத்தியாருக்கு ஜே! | 14 |
| வாழ்க்கை | 17 |
| கல்லும் சொல்லாதோ கதை-2 | 20 |
| ஸ்ரீமாங்-பரந்த நோக்கம் | 25 |
| உள்ளும் புறமும் | 29 |
| என்று காண்போம் | 33 |
| நிலமகள் வேக்காடு | 34 |
| மதிப்புரை | 39 |
| முத்தம் | 40 |



கலையில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியாகார்.

# எவ்வித தொந்தரவும் கொஞ்சங்கூடகிடையாது:

# அம்மணி!



மதராஸிலும், மற்ற ஊர்களிலுமிருக்கும் எங்கள் எம்போரியங்களில் பிரத்தியேக அனுபவமடைந்துள்ள விற்பனையாளர்கள் உங்களுக்கு சேவை செய்ய காத்திருக்கிறார்கள். அவர்களிடம் உங்கள் தேவைகளை தெரிவித்தால் திருப்தியடைவீர்கள்.

ஏராளமான விதவிதமான சரக்குகள். அவைகளின் உறுதிப்பாடு, குறைந்த கரார் விலை அமைத்திருப்பதற்குக் காரணம் கூட்டுறவு முறையில் தயாரித்து நேராக உங்களுக்கு விநியோகம் செய்யப்படுவதால்தான் என்பதை அறிந்து நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள். உங்களுக்கு பிடித்த ரகம் வேலைப்பாடுள்ள நெசவு கெட்டிச்சாயமுள்ள சரக்குகளாய் இருப்பதால் ஜனங்கள் எல்லோரும் எங்கள் கடைகளில் வாங்குவதில் திருப்தியடைகிறார்கள்

**கைத்தறியிலிருந்து நேராக உங்களுக்குத்தான்**

வேஷ்டிகள் . புடவைகள் . சட்டைகள் . டவல்கள் . பிரிண்ட்ஸ் சிங்கம்ஸ் . சிண்ட்ஸ் . விடு அலங்கரிக்கத் துணிகள் . மேஜை துணிகள் . படுக்கை விரிப்புகள் . கைக்குட்டைகள் . லுங்கிகள் அங்கவஸ்திரங்கள் . கொசுவலைகள் . க்வில்ட்ஸ் . தலையணிகள்.

# மதராஸ் கோவாபரேடிவ் கைத்தறி ஜவுளிகள்

## கட்டுப்பாடு விலைகளில் புதிய சரக்குகள்

**மதராஸ் கைத்தறி நெசவாளர் மாகாண கூட்டுறவு சங்கம் லிமிடெட்**

ஹாலோவேய்ஸ் கார்டன்ஸ், 34, பாந்தியன் ரோட், எழும்பூர், மதராஸ்

# பாட்டுரிமை நாட்டுக்கு

ஒரு நாடு எவ்வாறு வளமுறுகின்றது என்பதை அறிய அந்நாட்டு இயற்கை வளத்தைக் காணவேண்டும். அந்நாட்டு அறிவியல் எவ்வாறு ஏற்றமுறுகின்றது என்பதைக் காண அந்நாட்டு அறிஞர்களை-புலவர்களை அளவிட்டுக் காணவேண்டும். புலவர்—அறிவறிந்த புலவர்—அஞ்சாது அறமுரைக்கும் புலவர் வாழ்கின்ற நாடு நல்நாடாக விளங்குவதைக் காண்கின்றோம். அறிவறிந்த ஆண்மை மிக்க அரசனாயினும் அவனுக்கும் அறமுரைக்கும் ஆன்றோர் இன்றியமையாதவர் என்பதை இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன - வரலாறுகள் சான்று பகர்கின்றன.

> ' எவ்வழி நல்லவர் ஆடவர்
> அவ்வழி நல்லை வாழிய நிலனே '

என்ற பண்டைய தமிழ்ப் பாட்டும் இக்கருத்துக் கொண்டே எழுந்தது. எனவே புலவன் நாட்டை வாழ்விப்பவன் ; அணி செய்பவன். அவன் பாடல் நாட்டுக்குரியது. நற்புலவன் பாடல் பரந்த உலகுக்குரியது.

> ' வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
> வான்புகழ் கொண்ட தமிழ்நாடு '

என்றான் பாரதி, திருவள்ளுவனைப் பற்றிப் பேசுங் காலத்து. உலகெலாம் போற்றும் ஒருநூல் குறள். எனவே வள்ளுவன் உலகக் கவிஞன். அவன் பாடல் உலகத்தார் அனைவருக்கும் உரிய பொது உடமை. எந்நாட்டவரும பொன்னெனப் போற்றிப் புரக்கலாம் அந்நூலை. அவ்வாறே புரக்கின்றதையும் காண்கின்றோம். பாரதியின் ஆசை அது. ஆனால் அந்த ஆசையில் திளைத்த பாரதியாரின் பாட்டோ?

உறங்கிய தமிழகத்தைத் தட்டி எழுப்பியது பாரதியின் பாட்டு. உணர்ச்சியைத் தமிழன் ரத்தத்தில் ஊறுமாறு செய்தது பாரதியின் பாட்டு ; வாழ்வில் வீழ்ச்சியுற்ற அடிமை நாட்டில் உரிமைப்போர் கால்கொள்ள ஆவன செய்தது பாரதியின் பாட்டு. அவர் அன்று அனைத்து அல்லல்களுக்கு இடையிலே அண்ணாந்து அமைந்த செம்மை வாழ்வில் வாழ்ந்து, உச்சிமீது வானிடிந்து விழுந்துவிட்ட போதிலும் அச்சமில்லாது பாடினார். மக்கள் உறக்கத்தைப் போக்கினார். எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓர் இனம் என்ற பழந்தமிழர் உண்மையைப் புது

மெருகிட்டுப் புலப்படச் செய்தார். ஆம்! அவர் செய்த அனைத்தும் - பாடிய பாடல் அனைத்தும் - மக்கள் மனதில் பெயரா இடம் பெற்றுவிட்டன. பாடிய பாரதியின் விருப்பமும் அதுவே.

ஆனால் இன்று பாரதியின் பாடலைச் சிலர் தமக்கென உரிமை கொண்டாடுகின்றனர். அவர்தம் ஆணை இன்றி ஒருவரும் பாடவும் எழுதவும் கூடாதாம். இதுஒரு விந்தைச் செயல். பாருக்கெல்லாம் பாட்டிசைத்த புலவனை அன்று அடக்குமுறைக்கு உள்ளாக்கி ஆள்வது, ஆங்கில ஆட்சியார்தம் கொடுஞ் செயலினும் கொடுஞ் செயல். அவன் நாட்டுக் கவி. அவன் பாடல் நாட்டுக்குச் சொந்தம். அவன் எண்ண அலைகள் இந்த மண்ணின் மறுமலர்ச்சி அலைகள். அவன் சிந்தனைத் தேர் தமிழ் நாட்டில் தட்டாது ஓடிக்கொண்டிருக்க வேண்டும். ஆனால் பண ஆசைப் பிடித்த சிலர் அவன் பாடலை விலை பேசி வாங்கி, விலை கூறி விற்கத் துணிந்து விட்டனர். கேளாத அரசாங்கம் இருக்கும் வரையில் இதுவும் நடக்கும் இன்னமும் நடக்கும். எந்தப் பாரதியின் பாடலை விண் முட்டப்பாடி வாக்குரிமை பெற்று அரசியல் மண்டபத்தில் வீற்றிருக்கும் உரிமை பெற்றார்களோ அந்தப் பாடலை நாட்டுரிமைப் பாடலாக்க வேண்டுவது இன்றைய அரசியலாரின் கடமை. அதை ஒருவர் விலைகொடுத்து வியாபாரம் செய்வதும், பாடலைப் பாடவும் எழுதவும் பணம் கொடுத்து வியாபார முறையில் உத்தரவு பெறுவதும் அமையின் இதைவிட மானக்கேடு தமிழ் நாட்டுக்கு வேறு இல்லை.

சில நாட்களுக்கு முன் சங்க இலக்கியப் பதிப்புரிமை எமக்கே என்று பேசியவர் நிலை என்னவாயிற்று என்பது இப்பாரதிப் பாடல் உரிமையாளருக்கு நினைவூட்டுகின்றோம். இன்று சங்க இலக்கியம் பல அறிஞர்களால் பலப்பல வகையில் அழகாக வெளிவருவதைக் காண்கின்றோம். அந்த நிலையில் அரசியலார் ஆணையிடினும், அன்றி அஞ்சிக் கிடப்பினும் தமிழ் மக்கள் சிலநாட்களில் பாரதிப் பாடலை நாட்டுப் பொதுப் பாடலாக்குவார்கள் என்பது உறுதி.

அரசியலார், அத்தகைய கிளர்ச்சி தொடங்குவதற்கு முன் பாரதியின் பாடல் நாட்டுரிமைப்பாடல் என ஆக்க முன்வர வேண்டும். இன்று அவர்களை ஆளவந்தார்க ளாக்கியதே அவர்தம் பாடல்கள்தாம். அவற்றை ஒருவர் கையில் உரிமை கொடுத்து வரட்டவிடுதல் நன்றி செய்தலாகாது. அறிவுடைமையுமன்று. எனவே அரசியலாரும், தமிழர்களும் உடனடியாகப் பாரதி பாட்டுரிமை நாட்டுக்குரிய தென்பதை நிலைநாட்டுவாராக!

# சித்தூரின் தமிழ்ப் பகுதி

சென்ற இதழில் செங்கற்பட்டு மாவட்டத்தை தெலுங்கர் பெரும்பான்மையாக வாழ்கின்ற நிலப்பகுதிகளையும் அவற்றின் ஊர்ப்பெயர் மக்கள் தொகை முதலியவற்றையும் குறிப்பிட்டிருந்தோம். அதிலேயே சித்தூர் மாவட்டத்தை தமிழ் நாட்டோடு சேர இருக்கும் பகுதிகள் இவை இவை என்று தொட்டுக் காட்டி இருந்தோம். சித்தூர் வட்டத்தை 73 ஊர்களும், புத்தூர் வட்டத்தை 75 ஊர்களும், திருத்தணி வட்டத்தை 389 ஊர்களும் தமிழர் பெரும்பாலராக வாழ்கின்ற ஊர்கள் என்றும், திருத்தணி வட்டத்துப் பெரும்பகுதி தமிழ் நாட்டோடு சேர்க்கப்பட வேண்டும் என்றும் குறித்திருந்தோம். கணக்கொடு ஆராயுங்காலத்துச் சில ஊர்களில் தமிழர் பெரும்பாலராக வாழ்ந்தாலும் அந்த ஊர்களைச் சுற்றிலும் தெலுங்கு ஊர்கள் சூழ்ந்திருப்பதால் அவை தெலுங்கு நாட்டோடு சேர்க்க வேண்டிவரும் என்றும், அதே போல, சில ஊர்களில் தெலுங்கர் பெருவாரியாக இருந்தும், அந்த ஊர்களைச் சுற்றித் தமிழ் ஊர்கள் இருப்பதால் அவை தமிழ் நாட்டோடு சேர்க்க வேண்டிவரும் என்றும் இந்தக் கட்டுரையில் விளக்கியுள்ளோம். புத்தூர், சித்தூர் வட்டங்களிலே தமிழரும் தெலுங்கரும் பல இடங்களில் விரவியே உள்ளார்கள். எனவே திட்டமாக வரையறுத்தல் என்பது சற்றுக் கடினமாகவே உள்ளது. அந்த வட்டங்களிலே வாழ்கின்ற மக்கள் தமிழ் மக்கள்தான் என்றும், அந்த வட்ட அரசியல் மொழி தெலுங்கானதினாலேயே தெலுங்கர் பெருவாரியாகிவிட்டன ரென்றும் தமிழ் மக்கள் கூறுகின்றனர். அப்படியாயின் அங்கெல்லாம் பொதுமக்கள் வாக்கெடுத்தல் ஒன்றே திண்ணியமுடிவைத் தருவதாகும்.

சித்தூர் நகரத்தை 100-க்கு 45 பேர் தமிழர்களாக உள்ளார்கள். சித்தூரிலுள்ள வார்டுகள் 9-ல் 4-ல் தமிழர் பெருவாரியாக உள்ளனர். அதன் பக்கத்தை உள்ள இரண்டொரு ஊர்களில் தமிழர் பெரும்பாலராக உள்ளனர். ஆனாலும் சுற்றிலுமுள்ள பெரும்பாலான ஊர்களில் தெலுங்கர் உள்ளமையால் சித்தூரும் தெலுங்கு நாடோடு சேர்க்க வேண்டியதாகவே காணப்படுகின்றது.

நிற்க, இந்த மூன்று வட்டங்களிலும் எல்லைக் கோடு அமைப்பதில் அவ்வாறு கடினம் ஒன்றும் இல்லை. திருத்தணியின் பெரும்பாகம் செங்கற்பட்டு மாவட்டத் திருவள்ளூர் வட்டத்துடனும், வடஆற்காடு ஆர்க்கோண வட்டத்துடனும் இயைந்துள்ளது. வடகோடியிலுள்ள சில ஊர்கள்தான் தெலுங்கு நாட்டோடு சேர்க்கப்படவேண்டி வருகின்றன. இவ்வட்டத்து மத்தியிலும் தெற்கிலும் ஒன்பது தெலுங்கர் வாழும் பேரூர்கள் இருப்பினும் அவற்றைச் சுற்றிலும் தமிழர் வாழ்கின்றமையாலும் அந்த ஊர்களிலேயும் தமிழர் தொகை உள்ளமையாலும் அவை தமிழ் நாட்டோடு சேர்க்கப்படவேண்டுவன. அதே

போன்று மூன்று தமிழர் வாழும் பேரூர்கள் வடகோடியில் இருப்ப தால் அவை தமிழ் நாட்டோடு இணைக்கப்பட இயலவில்லை.

புத்தூர் வட்டத்தே தென்கோடியின் ஒரு சிறு பகுதிதான் தமிழ் நாட்டோடு சேர்கின்றது. நகரி மலையை அடுத்து வடக்கே ஆரணி ஆற்றை ஒட்டி தமிழ்நாட்டு எல்லை அமைகின்றது. அப்படி அமையும் காலத்துச் சில தெலுங்குப் பேரூர்கள் நகரி மலையின் அடிப்பகுதியில் தெற்கிலும் கிழக்கிலும் அமைகின்ற காரணத்தால் தமிழ் நாட்டோடு சேர்க்கப்பட வேண்டியுள்ளன. நகரி மலையை நீக்கி நகரி ஊரோடு மட்டும் தமிழ் நாட்டு எல்லை அமைப்பின் செங்கற்பட்டு மாவட்ட திரு வள்ளூரின் வடமேற்குப் பகுதிகள் தனித்து எல்லைக்கோடு அமைப் பதற்கு ஏற்கா முறையில் நிற்கின்றன. அத்துடன் ஆரணி ஆற்றை எல்லையாகக் கொண்டாலும்கூட தமிழர் வாழ்கின்ற ஐந்து பேரூர்களும் அவற்றைச் சார்ந்த சிற்றூர்களும் தெலுங்கர் வாழ் பகுதியோடு தான் சேர்க்கப்பட வேண்டியுள்ளன. இன்னும் தெற்கு வரின் பல தமிழ் ஊர்கள் தனிப்படும். எனவே ஆரணி ஆற்று எல்லையே புத்தூர் வட்டத் தில் அமைந்து, மறுபடியும் திருத்தணி வட்டத்தைத் தொட்டு அந்த எல்லைக் கோடு சித்தூர் வட்டத்தைத் தொடுகின்றது. புத்தூர் வட் டத்தே மத்திய தெற்குப் பகுதியே தமிழ் நாட்டோடு சேர்கின்றமை யின் அதில் ஒரு குழப்பமும் வரக் காரணம் இல்லை.

சித்தூர் வட்டத்திலேயும் மிகச் சில ஊர்கள்தான் தமிழ் நாட் டோடு சேர்கின்றன. அவ்வட்டத்து தென்கிழக்குப் பகுதியில் சில ஊர்கள் வடஆற்காடு வாலாஜா வட்டத்துடனும், மத்தியதெற்கில் சில ஊர்கள் வடஆற்காடு குடியேற்ற வட்டத்துடனும் சேர்கின்றன.

தென்கிழக்கில் வடக்கே பாமசத்து தொடங்கி தென்மேற்காகச் சென்று பொம்மசத்திரத்தை ஒட்டினாற் போல் கோடிட்டால் அந்தப் பகுதி வாலாஜா வட்டத்தைச் சாரும். அஃதேபோல் மத்திய தெற்கில் வீரிசெட்டி பள்ளியையும் அதைச் சேர்ந்த சிற்றூர்களையும் குடியேற்ற வட்டத்தே சேர்க்க வேண்டும்.

எனவே சித்தூர் மாவட்டத்தே உள்ள தமிழ்ப் பகுதிகள் எல்லைக் கோடு அமைப்பது ஒருவாறு முடிவு செய்யப்பட்டுள்ளது. மேற்காட் டியபடி தமிழ் நாட்டுடன் சேரும் தெலுங்கர் ஊர்களும், தெலுங்கு நாட்டில் சேரும் தமிழ் ஊர்களும் வேண்டுமானால் தத்தம் முடிவைத் பொதுவாக்கின்மூலம் அறுதியிடலாம். இந்த வகையில் தமிழர் தெலுங் கர்வேற்றுமை இன்றி தம் தம் நாட்டைப் பிரித்துக் கொள்ளலாம். இன்றே போல் என்றும் தமிழரும் தெலுங்கரும் நட்பு முறையில் வாழ லாம். இதற்கு எல்லைக் குழுவும் கூடத் தேவையில்லை. நமது பாகத் தைப் பிரித்துக்கொள்ள மூன்றுமவர் எதற்கு? மிகத்திட்டமாக நமது எல்லை அமைக்க வழி உண்டு. (படம் அடுத்த இதழில்) கிழக்கே பழ வேற்காடு தொடங்கி செங்கற்பட்டு மாவட்டத்தே சில ஊர்களை ஆக்

திரநாட்டில் சேர்த்து, சித்தூர் வட்டம் புத்தூர் வட்டத்தே சில ஊர்களைத் தமிழ் நாட்டோடு சேர்த்து, திருத்தணி வட்டாரத்தின் பெரும் பகுதியைத் தமிழ் நாட்டோடு சேர்த்து நாமே திட்டமாகப் பிரித்து விடலாம். தமிழரும் தெலுங்கரும் ஒன்று சேரவேண்டும். வேறுபாடு இன்றி எல்லைக்குழு இன்றி எல்லாம் இனிதே முடியும். அனைவரும் ஒன்றுபடுக என்று கூறி ஊர்க் கணக்கைக் கீழே கொடுத்து இக் கிளர்ச்சிப்பற்றிய கட்டுரையை முடித்துக் கொள்கிறோம்.

## திருத்தணி

இவ்வட்டத்தே நகரி ஆறு எல்லையாக அமைகின்றது. அதன் வட பகுதியில் உள்ள தெலுங்கு நாட்டில் சேரும் தெலுங்கர் பெரும்பாலராக வாழும் ஊர்கள், வட்டத்தின் தென்மேற்குப் பகுதியில் அமைகின்றன.

| | மக்கள் தொகை | தெலுங்கர் 100க்கு | | மக்கள் தொகை | தெலுங்கர் 100க்கு |
|---|---|---|---|---|---|
| காரிம்பேடு | 1527 - | 60 | கொணுகாலி குப்பம் | 974 - | 100 |
| கொளத்தூரு | 1945 - | 55 | இவற்றைச் சேர்ந்த சிற்றூர்களும் | | |
| திருமலராஜாபேட்டா | 647 - | 74 | **தெலுங்கு நாட்டில் சேரும் தமிழர் ஊர்கள்** | | |
| வடகுப்பம் | 678 - | 79 | | | |
| காரலம்பாக்கம் | 1314 - | 58 | நேடியம் | | |
| அத்திமஞ்சேரி | 974 - | 51 | வேலகரம் | | |
| நொச்சிலி | 1628 - | 66 | சாலகுப்பம் | | |

### தமிழ்நாட்டில் சேரும் தெலுங்கு ஊர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓரங்கல் கொல்லால குப்பம் | 796 - | 73 | ஸ்ரீ அரிபுரம் | 1899 - | 97 |
| கோட்டு வெங்கடபுரம் | 670 - | 56 | கோசலக்ராரம் | 779 - | 76 |
| சிவ்வாடா | 1345 - | 55 | இல்லத்தூரு | 805 - | 60 |
| விஜயபுரம் | 1792 - | 80 | பாட அரகாடு | 994 - | 95 |
| | | | கோசல் நகரம் | 779 - | 76 |

இவை வட்டத்தின் வடகிழக்கு சுற்றிக் கிழக்கிலும் வடக்கிலும் திருவள்ளூர் புத்தூர் தமிழர் ஊர்களாலும், தெற்கிலும் மேற்கிலும் திருத்தணி வட்டத் தமிழர் ஊர்களாலும் சூழப்பட்டுள்ளன.

## புத்தூர்

### தமிழ் நாட்டில் சேரும் தமிழ்ப் பேரூர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| காத்திரிபள்ளி | 322 - | 52 | கிருஷ்ணசமுத்திரம் | 232 - | 70 |
| | | | ,, | 416 - | 33 |
| அன்னூரு | 1512 - | 68 | லட்சுமிபுரம் | 81 - | 100 |
| கொல்லகுண்டா | 1537 - | 63 | இவற்றைச் சேர்ந்த சிற்றூர்களும் | | |

## தமிழ்நாட்டில் சேரும் தெலுங்கு ஊர்கள்

| நகரிமலையின் அடியில் இருப்பன | நகரி ஊரின் தென் கீழ்ப்பகுதியில் உள்ளன |
|---|---|
| குண்டராஜபுரம் | மெலம்பாக்கம் |
| மாங்காடு | கைபாக்கம் |
| வேலவாடி | பாதிரி |
| திருகுவாயி | சுவாமிரெட்டி கந்திரிகா |
| ஆரூரு | கலியம்பாக்கம் |
| காகாவேடு | ஜகந்நாதபுரம் |

### ஆரணி ஆறு எல்லையாக அமையின்

| தமிழ்நாட்டில் சேரும் தெலுங்கு ஊர்கள் | தெலுங்கு நாட்டில் சேரும் தமிழர் ஊர்கள் | |
|---|---|---|
| மேலப்பட்டு | காவனூரு | 975 - 53 |
| முடிபள்ளி | வெங்கிடகிருஷ்ணபல் | 568 - 52 |
| சரஸ்வதிவிலாசபுரம் | பீமனிச் செருவு | 672 - 100 |
| பீரகுப்பம் | கோவிந்தபாளையம் | 925 - 81 |
| ஐயம்பாக்கம் | எரிக்கம்பட்டு | 1099 - 70 |
| இவை நகரிஊர் எல்லையாக அமையின் தெலுங்குநாட்டில் சேரும் | | |

### நகரி ஊர் எல்லையாக அமையின் கூடுதலாகத் தெலுங்கு நாட்டில் சேரும் தமிழ் ஊர்கள்

| | |
|---|---|
| நிந்திரா | 2014 - 55 |
| கொப்புடுபுலசந்திரிகா | 282 - 100 |
| சவரிபாக்கம் | 827 - 61 |

சித்தூர் வட்டத்தைப்பற்றிய எல்லைக் கோட்டை முன்பே குறித்து விட்டோம். சித்தூர் வட்டத்துக்கு மேற்கே மைசூர் கன்னட நாடு வருகின்றது. நமக்கு அங்கு வேலையில்லை. சித்தூர்பற்றிய கணக்கு இது.

| சித்தூர் ஊர் | | | | | |
|---|---|---|---|---|---|
| பார்டு பிரிவு | 1 - 2297 - 66 | ,, | 5 - 2318 - 71 |
| ,, | 2 - 3024 - 38 | ,, | 6 - 2104 - 38 |
| ,, | 3 - 2769 - 51 | ,, | 7 - 1383 - 64 |
| ,, | 4 - 1919 - 34 | ,, | 8 - 3239 - 44 |
| | | ,, | 9 - 2276 - 44 |

மிகச்சிறிய ஊர்களை யெல்லாம் தொகுத்து எழுதின் கட்டுரை விரிவாவதோடு அவை இப்பேரூர்களுக்கு இடையே அமைந்து விடுகின்றமையாலும் இப்பேரூர்களின் இணைக்கோடுகளே அவற்றின் எல்லைகளாகவும் அமைகின்றமையின் முக்கியப் பேரூர்களை மட்டும் ஈண்டு குறித்துள்ளோம். எல்லைபற்றிய குறிப்புகள் இத்துடன் முடிகின்றன. அறிஞர் ஆய்ந்த ஆவன செய்வார்களாக!

நாட்டு நடப்பு

# இதுவும் ஒரு வேலைதான்

'இந்திய நாட்டில் முதலாளிகள் குற்றவாளிகளைப்போல் கருதப்படு கிறார்கள். எங்கள் நாட்டில் அதே முதலாளிகள் சிறந்த தேசபக்தர் களாகப் போற்றப்படுகிறார்கள். நாட்டுத் தொழில் வளம் பேணும் செல் வர்கள் இங்கே இந்தியாவில் இழிவாகப் பேசப்படுகிறார்கள். அங்கே எங்கள் அமெரிக்காவில் அமரர்களாகப் போற்றப்படுகிறார்கள்' என்று ஒரு அமெரிக்கன் இன்றைய இந்தியத் தொழில் போராட்டைத்தைப் பற்றியும், அதனால் முதலாளிகள் தாழ்த்தப்படுத்தப்படுவதைப் பற்றியும் வருந்திக் கூறினான் என ஒரு இந்தியர் கூறுகின்றார்.

யார் அந்த இந்தியர் என்று அறிய ஆவலுறுவோர் பலர். நாளிதழ் கள் அவரை யார் என்று நன்கு அறிமுகப்படுத்தின. இந்திய நாட்டுத் தொழிற் கொள்கையைப் பற்றிய விவாதம் தில்லி சட்டமன்றத்தே நடைபெற்ற காலை, அரசியலார் தம் கைத்தொழிற் கொள்கையை - தொழிலாளி முதலாளியின் தொடர்பில் அமைக்கும் வேறுபாடற்ற கொள்கையை - அரசியலாரும் உடன்கலந்து ஆக்கும் ஆக்கக்கொள்கை யைப் பயனற்றது என்று பழித்துப் பேசி, பாராளு மன்றத்தார் தம் நகைப்பிற்கு அணியாகி நின்ற பெரியார் திரு. ஸ்ரீவஸ்தவா அவர்கள் தாம் அந்த இந்தியர்.

அவர் சொல்லியது பற்றி யாரும் வருந்தவில்லை. அவர்தம் அறியாத்தனத்தை எண்ணி அவையிலுள்ளார் அனைவரும் நகைத்தார் களேயன்றி, அவரை இகழவில்லை. ஐயோ பாவம்! இத்துணை பரிவோடு பேசவந்த இவருக்குத் துணைவரின்மையின், அரசியற் கைத்தொழிற் கொள்கை மன்றத்தே நிறைவேறியது.

இந்நிகழ்ச்சியை அன்று வந்த நாளிதழில் படித்து முடித்துவிட்டு எழுந்தேன், அன்றைய பிறவேலைகளைக் கவனிப்பதற்காக. அதே நேரத் தில் தெருவில் ஒருவன் பாடிக்கொண்டே பிச்சை கேட்டான். கையில் ஏதோ ஒலி எழுப்பும் ஒரு கருவி இருந்தது. அதை அவன் தன் பாட்டுக்குச் சுதி எனக் கூறுகிறான். ஆள் நன்றாக இருந்தான். வயது பதினெட்டு அல்லது இருபதுதான் இருக்கும். எனக்கு அவனைப் பார்த்ததும் ஒருபுறம் பரிதாபம் மற்றொருபுறம் வெறுப்பு உண்டாயிற்று. இந்த வயதில் இவ்வளவு உடற்கட்டுடைய ஒருவன் பிச்சை எடுக்கத்

துணிந்தான் என்றால் வெறுப்பு உண்டாகாது என்ன செய்யும். ஆனால், முப்பத்திரண்டு அறம் வளர்க்கவேண்டிய முத்திநெறியை எண்ணும் போது இரக்கம்தான் உண்டாகும். என்றாலும் அவன் பாட்டை நிறுத்தச் சொன்னேன். அவனும் நிறுத்தினான். 'ஐயோ பாவம். ஏனப்பா பிச்சை எடுக்கிறாய்' என்றேன். 'வயிற்றுக் கொடுமை' என்றான். உண்மைதானே என்றது உள்ளம். என்றாலும் இந்த வயதில் அதுவும் தற்காலத்தில் எங்காவது வேலைசெய்தால் நாளொன்றுக்கு இரண்டு ரூபாய் சம்பாதிக்கலாமே என்றேன். நான் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது திகைப்பான் என்று எண்ணினேன். ஆனால் அவன் முன்பின் யோசியாது 'இதுவும் ஒரு வேலை தானே' என்றான். எனக்குக் கோபம் வந்தது. கோபக்குறி முகத்தின் தோன்றியதுபோலும். உடனே அவன் 'சாமி கோபிக்க வேண்டாம். இது ஒரு தொழில்; எங்கள் சாதி இந்தத் தொழிலைத்தான் செய்கிறது. நாங்கள் ஒரு சித்த சாதியைச் சேர்ந்தவர்கள். பகல் வேஷம் போட்டுப் பணம் பெறுவோம். இதோ இந்த தம்பூரு சகிதம் வீடுதோறும் சென்று பிச்சை கேட்போம். இதுபோல் இன்று நாட்டில் எங்கள் உறவினர் பலர் இருக்கின்றனர். ஆகவே இதில் கோபம் கொள்ள ஒன்றும் இல்லை. இது நேற்று இன்று ஏற்பட்டதல்ல. பரம்பரை வழக்கம். இது என் வேலை' என்று ஒரு பிரசங்கம் செய்து நிறுத்தினான். நான் அப்படியே மரமாகி நின்றேன். அவனையே நோக்கினேன். அதற்குள் வீட்டுப் பையன் சிறிது அரிசிபோட அவன் போய்விட்டான்.

ஆம்! அந்தப் பிச்சை வேலைக்காரன் போய்விட்டான். ஆனால்! ஆனால் என்ன! அவன் சொன்ன சொல் எதிரிலே சுவற்றில் எழுதப் பட்டிருப்பதைப்போல் தோன்றியது. அதைக் காட்டிக்கொண்டே ஸ்ரீவத்சவா பேசிக்கொண்டிருப்பதும், அதைக் கண்டு பலர் நகைப்பதும் தென்பட்டது. நகைப்பதைக் கண்ட ஸ்ரீவத்சவா, காட்டிய திசை நோக்கித் திருப்பி 'பிச்சை எடுக்கும் இதுவும் ஒருவேலை' என்பதைப் படித்து வெட்கித் தலைகுனிந்ததும் தெரிந்தது.

அந்தச் சிந்தனை உள்ளம் இதுவும் ஒருவேலை என்பதை எத்தனையோ முறை சொல்லி இருக்கும். ஆனால் பயன் என்ன? அப்படியே மறுபடியும் சாய்வு நாற்காலியில் படுத்தேன்.

அந்தோ! இந்தப்பிச்சையை வாழ்வுக்காகக் கொண்டு – வேலையாகப் பற்றி வாழும் நாட்டிலேதான் நாம் டாடாவையும் பிர்லாவையும் போற்றுகிறோம். பாராளுமன்றத்திலே பலர் பழிச்சொல்லுக்கும் அஞ்சாது டாடாவைப் போற்றவேண்டும் நாம் என்றார் ஸ்ரீவத்சவா. அவர் முதல்

போட்டு ஆலை - தொழிற்சாலை தொடங்கி இராவிட்டால் இன்றைய நிலையில் இந்தியா இருக்காது என்று கூச்சமின்றிக் கூறுகின்றார் அவர். அதே சமயத்தில் யாருடைய கையுழைப்பால் அந்தக் கைத்தொழில் வளர்ச்சியுற்றது என்பதை எண்ணிப் பார்க்க மறுக்கிறது அவர் உள்ளம். லட்சக்கணக்கான மக்கள் வயிற்றுக்குப் போதுமான அளவு உணவில்லாது வாடிய போதிலும் ஓய்வில்லாது உழைத்த உழைப்பின் பலனல்லவா இன்றைய கைத்தொழில் வளர்ச்சி. இதை எண்ணிப் பார்க்க நேரமில்லை அவருக்கு. எப்படி இருக்கும்? செல்லச் சீமான்களது கோலாகலத்திலே-கொண்டாட்டத்திலே-கூத்தடிப்பிலே மூழ்கிக் கிடக்கும் அவருக்கு அந்தக் கொண்டாட்டத்திற்குக் காரணமாகிய ஏழைகளை எண்ணிப்பார்க்க ஏது நேரம்.?

வாழ்வில் பல கலை உண்டு என்றால் பிச்சை எடுப்பதும் ஒரு கலை என்கிறான். வாழப் பலவகை உண்டு என்றால் பிச்சை எடுப்பதும் ஒரு வகை என்கிறான். இது ஒருபுறத்திலே அன்றாடக் காட்சியாகக் காணும் போது, கோடீஸ்வரர்களுக்கு வக்காலத்துப் பெற்று அவர்கள் என்றும் இன்றேபோல் வாழவேண்டும் என்று பேசுகின்றனர், அரசியல் மன்றத்திலுள்ள அறிஞர்கள்.

தொழிலாளியையும் ஒரு கூட்டாளியாகவே கொள்ளவேண்டும் என்று தோழர் ஜெகஜீவன்ராம் அவர்கள் சொல்லும்போது பலருக்கு உள்ளம் வெடித்திருக்கும். ஆனால், அவர் உண்மை நாட்டங்கொண்டு நாட்டைக் கண்டிக்கிறார். அந்த நிலையிலே தொழிலாளியையும், முதலாளியையும் கூட்டாளிகளாக இணைத்தால்தான் இன்றைய பொருளாதார வேறுபாடும், பிற சச்சரவுகளும் தீருமென்று கருதுகின்றார். ஆனால் இது வாழ்க்கைச் சீரமைப்புக்கு, பொருளாதார முன்னேற்றத்திற்கு முதற்படியேயாகும். இந்த முதற்படியில் காலை வைப்பதற்கே முதலாளிமார்களது மூலபல சேனைகளெல்லாம் கதறுகின்றன. அந்தோ சுற்றியுள்ள உலகச் சூழ்நிலையைக் கண்டும் காணாக் குருடர்கள் போன்று இப்படி முதலாளிகளும், அவர்தம் கையாட்களும் கதறுவார்களானால் முடியும்வரையில் - சமதர்ம மாளிகையின் கடைசி மேற்படிக்குச் செல்லும் வகையில் என்னென்ன இடருறுவார்களோ? சற்று அவர்கள் வருத்தம் அல்லது கோபம் நீங்கிச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். முதலாளியின் பொருளால் கைத்தொழில் வளம்பெற்றதாகவே வைத்துக் கொள்வோம். அந்தப் பொருள் முதலாளியை எவ்வாறு அடைந்தது பல ஏழைகளின் பாட்டின் பயன் அல்லவா அது? அன்றி அந்த முதலாளிகளது கள்ள வாணிபமோ கொள்ளை லாபமோ அந்தப் பொருட்

பெருக்கத்துக்கு ஏதுவாக அமைந்திருக்கவேண்டும். இப்படி வாழ்வின் தேவைக்கும் அதிகமாகப் பலகோடி ரூபாய்களைத் தேக்கி வைக்கும் ஒரு சிலர் நாட்டில் இருக்க - பலர் உண்ணவும் உடுக்கவும் இருக்கவும் வசதி யற்றிருக்கக் காணல் நேர்மையாகுமா? அதுவும் பிச்சை எடுப்பதும் ஒரு வேலைதான் என்று அந்த வேலையை அன்றாட வேலையாகச் செய்துவரும் மக்களும் நம்மிடை உள்ளபோது அவர்களை மறந்து, அவர்களை வளர்க்கும் நாட்டை மறந்து, நாம் மட்டும் தலைநிமிர்ந்து வாழ்ந்தால் அதுவும் மற்றவர்கள் உழைப்பால் வாழ்ந்தால் போதும் என்று எண்ணும் முறை அறிவுடைமையாகாது. அமைவுடைமையும் ஆகாது. ஆகவே செல்வர்கள் தம் நிலையிலிருந்து இறங்கிப் பொதுநலம் பூக்கப் பாடுபட வேண்டும். அவர்தம் உள்ளம் விரைவில் இறங்காதுதான். ஆகவே அரசியலார் அதற்கேற்ற வழியிலே சட்டங்கள் இயற்றித்தான் ஆகவேண்டும். இன்றைய விடுதலை ஏட்டளவிலே உள்ளது. என்று மக்கள் பொருளாதார விடுதலை பெறுகின்றார்களோ - என்று மக்கள் எல்லோரும் எவ்வகை வேறுபாடும் இன்றி வாழ்கின்றார்களோ அன்று தான் நாடு உண்மை விடுதலைபெற்ற நாடாகும். அந்த நல்லநாள் விரைந்து வருவதாக! வருவதற்கு அரசியலார் ஆவன செய்வாராக. காலம் அந்த நாட்டை விரைந்து காண்பதாக!

---


## கௌசல்யா கிரைப் மிக்சர்

இது, குழந்தைகளுக்கு உண்டாகும் வயிற்றுவலி, அஜீர்ணம், குடல் கோளாறு, மாந்தம் முதலியவை உண்டாகாமல் தடுத்து, நல்ல ஜீர்ண சக்தியைத் தந்து, குழந்தைகளைப் பாதுகாப்பதில் சிறந்த ஔஷதம்!

இம்மருந்து ஒவ்வொரு வீட்டிலும் இருப்பது நல்லது.

**கௌசல்யா பர்மசி லிமிடெட்**

P. O. Box 88, மதராஸ்

# அரசியல் அமைப்பு

இந்திய நாட்டு அரசியல் அமைப்பு முறை பற்றிய கட்டுரைகள் இந்த இதழில் இடம்பெறும் என்று குறித்திருந்தோம். அரசியல் அமைப்பு பற்றி சென்னை அரசியலார் வெளியிட்ட வெளியீடு தற்போது பொதுமக்களுக்குக் கிடைக்க வழி ஏற்பட்டுள்ளது. அதை ஆய்வதற்கென அமைக்கப்பட்ட குழுவார் தம் கருத்தை வெளியிட்டுள்ளார்கள். இந்தக் குறிப்புகளோடு, அந்த அமைப்பு முறை அடுத்த அரசியல் அமைப்பு மன்றத்தே வாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் பெறும். வாதப் பதில் வாதங்களிலே பலவகை மாறுதல்கள் ஏற்படலாம். எனவே இது முடிந்த முடிவு என்று கொள்வதற்கில்லை.

வெளிவந்த அரசியலமைப்பு முறை பதினெட்டு பிரிவுகளைக் கொண்டதாகவும், பல பிற்சேர்க்கைகளைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது இந்த அமைப்புமுறை நடைமுறைக்கு வருமுன்பேகூட ஆந்திர மாகாணம் பிரிக்கப்படலாம் என்ற தமது கருத்தை ஆய்வுக் குழு வெளியிட்டுள்ளது.

பொதுவாக, தற்போதைய ஆட்சிமுறைக்குப் புதிய அமைப்பு முறைக்கும் பெருவாரியான வேறுபாடுகள் ஒன்றும் கிடையா. சிறு சிறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. மத்திய அரசாங்கம் அதிக உரிமைகளைத் தனக்கு அமைத்துக்கொள்ள வழி காணப்படுகிறது. அது வெறுத்து கண்டிக்கத் தக்கதேயாகும். மாகாண அரசியல் அலுவலாளர்களைக் கைப்பொம்மையென ஆக்கும் வகையில்தான் திட்டம் தீட்டப்படுகிறது. மாகாணத் தலைவராகிய கவர்னரைக்கூட மத்திய அரசாங்கம் தான் முடிவாகத் தேர்ந்தெடுக்குமாம். பொருளாதாரம் முழுதும் மத்திய அரசாங்கத்தில் இருக்கும். சாதி, சமய வேறுபாடுகளை ஒழிக்கக் குறிப்புக்கள் காட்டப்பட்டிருக்கின்றனவே ஒழிய, அவற்றிற்கெல்லாம் விதிவிலக்குகளும், மேன்மேலும் அவை வளர வழிகளும்கூட இடம் பெற்றுள்ளன. அரசியல் மன்றத்தே அமையும் உறுப்பினர் ஆய்ந்து யாதொரு வேறுபாடும் அற்ற நிலையில் வருங்கால அரசியல் அமைப்பை ஆக்கவேண்டும் என்பது நமது அவா! மொழிவழி நாடுகள் பிரிக்கப்பட்டு அவை அவை தம் தம்மைச் சீர்திருத்திக்கொள்ள - ஆள முழு உரிமை அளிக்கப்பட வேண்டும் என்பது நம் கருத்து. இவற்றையெல்லாம் அடுத்துவரும் அரசியல் மன்றக் கூட்டம் [ஜூலை-48] ஆராய்ந்து முடிபுகாணும். அம்மன்றத்தின் முடிபே முடிந்த முடிவாகும். அம் முடிவுகள் அறிந்தபின் அவை பற்றிய விளக்கங்கள் இடம்பெறும். அந்தக் காலமும் நெடுந்தொலைவில் இல்லை. விரைவில் நிலையறிவோம்!

# தமிழ் வாத்தியாருக்கு ஜே!

'தோழன்'

நான், மணி, கண்ணன், முருகன் கோவிந்தன், இராமநாதன் ஆகிய வரும் நல்ல நண்பர்கள். நாங்கள் ஒரே பலகையிலே உட்காரு வோம். கடைசி பலகையில் உட் கார்ந்து கொள்வோம். எங்களில் இராமநாதன் நிரம்பவும் துணிச்ச லானவன். கண்ணன் பணக்கார வீட்டுப் பையன். அவன் அப்பா அவனுக்கு நிறையக்காசு தருவார். எங்களுக்கெல்லாம் வேர்க்கடலை, பட்டாணி, மிட்டாய், கமர்கட்டு பலகாரம் இவையெல்லாம் வாங்கிக் கொடுப்பான். அதனாலேயே நாங்க ளெல்லாம் அவனையே சுற்றிக் கொண்டிருப்போம்.

வாத்தியார் பாடஞ் சொல்லிக் கொடுத்தால் நாங்கள் அதை அதிகமாகக் கவனிக்கமாட்டோம் கடைசி பெஞ்சியிலே உட்கார்ந்து கொண்டு பலகையிலே கட்டம் போட்டு வித விதமான விளையாட் டுக்கள் விளையாடுவோம். மணி மட்டும் நன்றாகப் படித்துவிடு வான். இருந்தாலும் எங்களோடும் விளையாடுவான். வாத்தியார் எங் களில் யாரைக் கேள்வி கேட்டா லும் பக்கத்தில் புஸ்தகத்தை வைத்துக் கொண்டு சொல்லிக் கொடுப்போம். அவன் சுலபமாகப் பதில் சொல்லிவிடுவான்.

எங்களைப்பற்றி மற்றப்பையன் கள் கூட வாத்தியாரிடம் கோள் சொல்லமாட்டார்கள். அப்படிக் கோள் சொன்னால் வெளியிலே வந்த பிறகு அவனை நாங்கள் பார்த்துக் கொள்ளுவோம். மற்ற பையன்களுக்கு எங்களைக் கண் டால் உள்ளத்தில் பயந்தான். நாங்கள் பின்னாலே இருந்து கொண்டு காகிதத்தால் அம்பு செய்து முன்னாலே இருக்கும் பையன்கள்மீது எறிவோம்.

ஒருசமயம் விஞ்ஞான ஆசிரியர் ஏரோப்ளேன் பறக்கும் விதத் தைப்பற்றிச் சொல்லிக் கொடுத் துக் கொண்டிருந்தார். அப் பொழுது இராமநாதன் காகிதத் தால் ஏரோப்ளேன் செய்து அவர் மேஜைமீது எறிந்தான். அது 'ஜம்' என்று மேலே பறந்து வாத்தியார் தலைப்பாகை மீது பாய்ந்தது.

பையன்கள் எல்லாம் சிரிக்க ஆரம்பித்தார்கள். வாத்தியாருக் குக் கோபம் வந்துவிட்டது. அவ மானம்வேறு தாங்க முடியவில்லை.

'யார் அது ?'

பதில் இல்லை.

'யார் அது? சொல்லப் போகிறீர்களா? இல்லையா? உண்மையைச் சொல்லி விடுங்கள் இல்லாவிட்டால் அனைவருக்கும் பூசை விழும்.'

ஒருவருக்கும் சொல்லத் தைரியம் பிறக்கவில்லை. அவர் ஒவ்வொருவரையும் கூப்பிட்டார். தெரியாது என்று சொன்ன அனைவருக்கும் 'பிரப்பம் பழம்' கிடைத்தது.

என்னையும் கேட்டார். நான் "சார் தங்களுக்கு ஏரோப்ளேன் தலைமீது மோதிவிட்டதால் காயம் ஏதேனும் பட்டுவிட்டதோ" என்று தைரியமாகக் கேட்டேன். "எனக்குக் காயம் படவில்லை, உங்களுக்குத்தான் காயம் படுகிறது" என்று கூறி 'நீட்டு கையை' என்றார். 'கையை நீட்டு' என்றார் மறுபடியும். கையை நீட்டினேன்.

அவர் கோபமெல்லாம் சேர்ந்து ஓங்கி அடித்தார். ' அடிக்கும் பொழுது கையைச் சிறிது விலக்கினேன். அடி மேசைமீது பட்டது. அங்கே இருந்த அவரது மூக்குக் கண்ணாடிமீது பட்டது. பக்கத்திலிருந்த இங்கி புட்டியும் கீழே விழுந்தது. வாத்தியார் மூக்குக் கண்ணாடி ஒடிந்துவிட்டது. எல்லாரும் 'குபுக்' என்று சிரித்து விட்டார்கள். மூக்குக் கண்ணாடி போன வருத்தத்தில் மற்றவர்களை அடிப்பதை நிறுத்திவிட்டார். அதற்குள் 'டங்' 'டங்' என்று மணி வேறு அடித்துவிட்டார்கள். அவரும் போய்விட்டார்.

மறுநாள் வகுப்புக்குள் நுழைந்தார். பையன்கள் 'களுக் களுக்' என்று சிரிக்க ஆரம்பித்தார்கள். அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை. பாடம் நடத்தத் தொடங்கினார். சுகாதாரப் பாடம் சொல்லிக் கொடுத்தார். எல்லோரும் சுத்தமாகக் குளிக்கவேண்டும். துணிகள் தூய்மையாக இருக்க வேண்டும் என்றார்.

"சார் ஒரு சந்தேகம்" என்றான் மணி.

"என்னடா உட்கார்."

"தங்கள் துணிகள் மட்டும் ஏன் கருப்பாய் இருக்கிறது?"

"எங்கேயடா?"

"உங்கள் கோட்டுப் பின்புறத்தில் பாருங்கள் சார்"

"என்னடா இருக்கிறது" என்று கேட்டுக்கொண்டே கோட்டைக் கழற்றினார். புது வெள்ளைக் கோட்டில் கருப்பு இங்கி நிறைய அடிக்கப்பட்டிருந்தது. அவர் முகத்தில் வருத்தம் தோன்ற ஆரம்பித்தது. ஹெட் மாஸ்டரிடம் சொல்லி இருப்பார். ஆனால் அவருக்கே அவமானம். பையன்களை அடக்க முடியவில்லை என்ற கெட்ட பெயர் உண்டாகும். மேலும் அவருக்கு இன்னார் என்று கண்டு பிடிக்க முடியாது. பிறகு பாடம் நடத்தத் தொடங்கினார்.

அவர் குரலில் உற்சாகம் காணப்படவில்லை. அவர் மேலும் பாடம் நடத்தாமல் சில கேள்விகள் கொடுத்து விடை எழுதச்,

சொன்னார். பையன்கள் எழுதிக் கொண்டிருந்தார்கள். நாங்கள் கட்டம் போட்டு விளையாடிக் கொண்டிருந்தோம். மணி அடித்தது. வாத்தியார்தான் முதலில் எழுந்தார். கூடவே நாற்காலியும் நகர ஆரம்பித்தது. அவர் துணிகள் நாற்காலியை விடவில்லை.

அதில் பூசியிருந்த பிசின் அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. இப்பொழுது விஷயத்தை உணர்ந்து கொண்டார். அவருக்கு இன்னது செய்வது என்று தோன்றவில்லை. பையன்கள் எல்லாம் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். கடைசி பலகையில் உள்ள நாங்களும் சூழ்ந்து கொண்டோம்.

மெதுவாக அவர் துணியை எடுத்துக் கொண்டார். துணி வேறு கிழிந்து விட்டது. அவருக்கு அவமானம் தாங்க முடியவில்லை. பிறகு போய்விட்டார்.

மறுநாள் சனிக்கிழமை. நான், மணி, இராமநாதன், முருகன், கோவிந்தன் எங்கள் 'செட்' முழுவதும் 'கிருஷ்ணா விலாஸ்' ஹோட்டலுக்குச் சென்றோம். போண்டா சாம்பார் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம்.

உள்ளே ஓர் அறையில் விஞ்ஞான வாத்தியார் குரல் கேட்டது. எட்டிப் பார்த்தோம். அவரும் தமிழ் வாத்தியாரும் 'காபி' சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். இரண்டு பேரும் பேசிக்கொண்டிருந்தார்கள். உற்றுக் கவனித்தோம்.

"சார்! உங்கள் மூக்குக் கண்ணாடி எங்கே சார்?" என்று தமிழ் வாத்தியார் கேட்டார்.

நடந்ததெல்லாம் வருத்தத்தோடு சொல்லிக்கொண்டிருந்தார். "எப்படி சார் அந்த வகுப்பில் பாடம் நடத்துவது? இவ்வளவு மோசமா இருக்கிறார்களே இந்தப் பையன்கள்!" என்றார்.

"அவர்களை நீங்கள் அடித்து இருக்கக்கூடாது சார். அதுதான் தவறு. தட்டிக்கொடுத்து வந்தால் தான் நாம் வகுப்பு நடத்த முடியும். சிறுவயதில் குறும்புத்தனம் இயற்கை. அது நல்லதுகூட, அது வளர்ச்சிக்கு அறிகுறிதானே. அதைப் பொறுத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நல்லது சார்" என்றார்.

நாங்கள் ஹோட்டலுக்கு வெளியே வந்து 'தமிழ் வாத்தியாருக்கு ஜே' என்று கத்திவிட்டு ஓடிவந்து விட்டோம்.

# வாழ்க்கை

மு. வரதராசன்

வாழ்க்கையைச் சிலர் ஒரு கலையாக அமைத்துக் கொண்டு வாழ்கின்றார்கள். சிலர் பெருஞ்சுமையாக ஆக்கிக்கொண்டு வருந்துகின்றார்கள். பலர் கண்மூடிக் காலம் கழிக்கின்றார்கள்.

நன்றாக எண்ணி ஆராய்ந்து உண்மை உணர்ந்தவர்களுக்கு வாழ்க்கை கலையாக அமைகின்றது. தவறாக எண்ணிக் கலங்கி மயங்கினவர்களுக்கு அந்த வாழ்க்கையே பெருஞ்சுமையாக ஆகின்றது. எண்ணத் தெரியாதவர்களுக்கு இந்த இரண்டு நிலையும் இல்லை. அவர்கள் வாழ்க்கையே கண்மூடி வாழ்க்கை. அவர்கள் மற்றவர்களைப்போலப் பேச முயல்வார்கள்; செய்ய முயல்வார்கள். அவ்வளவே அல்லாமல் அவர்களுக்கு வாழ்க்கை தெரியாது.

விலங்குகளும் பறவைகளும் வாழும் வாழ்க்கை வேறு. அவைகளுக்கு எண்ணவும் தெரியாது; பின்பற்றவும் தெரியாது. அவைகளைப் படைத்த இயற்கை, இயல்பான வாழ்க்கையை ஏற்படுத்தியுள்ளது. விலங்குகளும் பறவைகளும் பிறக்கின்றன; தீனி தேடித் தின்கின்றன. ஓடியும் பறந்தும் வளர்கின்றன; துணை தேடித் திரிகின்றன. பகை கண்டு ஒளிந்தாவது போராடியாவது தப்புகின்றன. தப்ப முடியாத போது அழிகின்றன. இவ்வளவுதான் அவைகளின் வாழ்க்கை. இந்த வாழ்க்கைக்கு வேண்டிய இயற்கை அறிவு அவைகளுக்குப் பிறப்பிலேயே அமைந்துள்ளது. தாயின் வயிற்றிலிருந்து பிறந்த கன்றுக்கு எவ்வளவு தெரியுமோ அவ்வளவுதான் கிழப்பசுவுக்கும் தெரியும். அந்த அறிவு வளர்வதும் இல்லை; தேய்வதும் இல்லை.

ஆனால், மனிதன் பிறக்கும்போது பெற்றுள்ள இயற்கை அறிவு மிக மிகக் குறைவு. அதனால், மனிதன் அறிவற்றவனாகவே பிறக்கின்றான் என்று சொல்லலாம். ஆனால், வளர வளர அவன் எவ்வளவோ கற்றுக் கொள்கின்றான். தன்னோடு பழகுகின்றவர்களிடமிருந்து கற்றுக்கொள்கின்றான். அதுவும் போதாதென்று தனக்கு முன்னே பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து மறைந்தவர்களின் அனுபவங்கள் பொதிந்த நூல்களிலிருந்து கற்றுக்கொள்கின்றான். தானாகவே எண்ணி எண்ணிப் புதிய உண்மைகளையும் உணர்கின்றான். அறிவற்ற குழந்தையாகப் பிறந்த மனிதன் பழக்கத்தாலும், படிப்பாலும், பண்பட்ட உணர்வாலும் இப்படி அறிவை வளர்த்துக் கொள்கின்றான். பிறக்கும்போது வெறுமையான மூளையோடு பிறக்கின்றான். ஆனால், சாகும்போது கற்று வளர்ந்த

சிறந்த மூளை உடையவனுய்ச் சாகின்ருன். இவன்தான் மனிதன் இவன் பிறந்ததும் வீணல்ல; இறந்ததும் வீணல்ல. இவன் வாழ்ந்த பயனுள்ள வாழ்க்கை போதும். அறிவு வளம்பெற்ற மூளையுடையவன் இன்பத்தின் எல்லையையும் காணமுடியும். துன்பத்தின் எல்லையையும் காணமுடியும். நல்ல நெறியில் வாழ்ந்தாலும் வாழலாம்; தீய நெறியில் அலைந்தாலும் அலையலாம். விதைப்பது விளையும். மற்றவர்களுக்கு நன்மையாக வாழ்ந்தால் நன்மை விளையக் காண்பான்; மற்றவர்களுக்குத் தீமையாக வாழ்ந்தால் தீமையே விளையக் காண்பான்.

மகிழ்ச்சியோடு வாழ்ந்து மகிழ்ச்சியோடு உயிர் விடுகின்றவர்களும் உண்டு. இனி ஒரு நொடியும் வாழ முடியாதென்று துன்பத்தால் கலங்கி உயிரைப் போக்கிக்கொள்கின்றவர்களும் உண்டு. ஆகையால், சிலர்க்கு வாழ்க்கை கலையாக இருக்கின்றது; சிலர்க்கு வாழ்க்கை சுமையாக இருக்கின்றது.

'நாமார்க்கும் குடியேல்லோம்' என்று அஞ்சாமல் வாழ்ந்தவர் திருநாவுக்கரசர். 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை.' என்னும் நற்சான்று பெற்றது அவருடைய வாழ்க்கை. திருநாவுக்கரசர் சிறந்த மனிதர். அவருடைய வாழ்க்கையும் சிறந்த வாழ்க்கை. அவரைப் போன்ற உயர்ந்த மனிதர்களைப் பின்பற்றி வாழ வேண்டியது கடமை.

'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்று வாழும் வாழ்க்கை எளிதில் கிட்டுவதல்ல. மனிதன் பல படிகளையும் கடந்து ஏறியபின் அடைவதாகும். உயர்ந்த மேல் மாடியை அடைந்து வாழ ஆசைப்பட்டு ஒருவன் கீழ்ப்படிகளில் நின்று திகைப்பது தகுமா?

திருநாவுக்கரசர் போல் எண்பது வயதான பிறகும் வாய்க்குச் சுவையான உணவை மட்டுமே தேடி அலைகின்றவர்கள், கீழ்ப்படியில் நின்றுகொண்டே திகைக்கின்றவர்கள் ஆவார்கள். அவர்கள் வாழ்க்கை நாக்கின் அளவில் நின்றுவிட்ட வாழ்க்கை என்று சொல்லலாம்.

இன்னுஞ் சிலர் உணவுப்பொருள்களைத் தேடி அலையாமல் அவைகளைப் பெறுவதற்குக் கருவியாக உள்ள செல்வத்தைத் தேடி அலைகிருர்கள். எவ்வளவு பணம் சேர்த்தாலும் போதாமல் மேன்மேலும் ஆசை கொண்டு அலைகின்ருர்கள். செல்வத்தைச் சேர்த்துப் பெட்டியை நிரப்புவதே அவர்களுக்கு நோக்கமாக இருக்கிறது. அவர்களுடைய வாழ்க்கை பணப்பெட்டியின் அளவில் தேங்கிவிட்ட வாழ்க்கையாகும்.

இன்னுஞ் சிலர் உணவைத் தேடுவதும் கடந்து, செல்வம் தேடுவதையும் கடந்து, சிற்றின்பம் தேடி அலைகின்ருர்கள். மூப்பும் பிணியும் நெருங்கி வந்துவிட்ட பிறகும் உடம்பின் உணர்ச்சியையே பொருட்படுத்தி வாழ்க்கை நடத்துகின்ருர்கள். அதற்காக எல்லாத் தவறும் செய்யத் துணிகின்ருர்கள். பெண்களை அடிமைகளாக்கிக் காமக்கருவிகளாக நடத்துகின்ருர்கள். அவர்களுடைய வாழ்க்கை சிற்றின்ப அளவில் நின்றுவிட்ட வாழ்க்கையாகும்.

இன்னுஞ் சிலர் செல்வாக்கைத் தேடி அலைகின்றார்கள். உணவுப் பொருள், செல்வம், சிற்றின்பம் ஆகிய எல்லாம் செல்வாக்குள்ளவர்களுக்குத் தாமாகவே கிடைப்பதால் அவர்கள் செல்வாக்கைத் தேடி அலைகின்றார்கள். அரசியலில் உயர்ந்த பதவி பெற்றவர்களுக்கே செல்வாக்கு உண்டு. ஆகையால் அரசியல் பதவிக்காக வாழ்நாளெல்லாம் பாடுபடுகின்றார்கள். இதுவே இவர்களுடைய வாழ்க்கை. இந்த வாழ்க்கை அரசியல் அளவில் நின்று தேங்கின வாழ்க்கை ஆகும்.

திருநாவுக்கரசர் வாழ்க்கை இந்த நான்கு நிலைகளையும் கடந்த வாழ்க்கை. இந்த நான்கு வாழ்க்கைக்கும் தன்னலமே அடிப்படையாக இருக்கின்றது. இந்த நான்கையும் கடந்த திருநாவுக்கரசர் வாழ்க்கையில் தொண்டே அடிப்படையாக இருக்கின்றது. திருநாவுக்கரசர் உலகத்து உயிர்களையெல்லாம் போற்றினவர். எல்லா உயிர்களையும் கடந்து உயிர்க்குயிராகவுள்ள கடவுளையே நாடியவர். அதனால் அவரிடம் தன்னலம் தங்க முடியவில்லை. தொண்டுதான் இடம் பெற்றது. அவருடைய கையில் விளங்கிய உழவாரப்படை தன்னல மற்ற தொண்டு வாழ்க்கைக்கு அறிகுறியாகும்.

உலகமெங்கும் தன்னல வாழ்க்கை காணலாம். அங்கங்கே வாழ்க்கை பெருஞ்சுமையாக இருத்தலையும் காணலாம். நாக்குக்குச் சுவை அல்லது பெட்டிக்குப் பணம் அல்லது உடலுக்குச் சிற்றின்பம் அல்லது செல்வாக்குக்கு அரசியல் இவ்வாறு பல வடிவங்கள் கொண்டாலும் வாழ்க்கையின் சுமை குறைவதில்லை.

ஆனால், உயிர்களுக்கு இறைவன் என்ற நல்ல நாட்டம் மனிதனைக் காப்பாற்றுகின்றது. தன்னலத்தை நீக்குகின்றது. தொண்டு செய்து வாழச் செய்கின்றது. வாழ்க்கையைக் கலையாக்குகின்றது. மரணத்தை நெருங்கும்போது,

> 'அங்கத்தை மண்ணுக் காக்கி ஆர்வத்தை உனக்கே தந்து
> பங்கத்தைப் போக மாற்றிப் பாவித்தேன் பரமா நின்னை'

என்று அமைதியோடு ஆறுதலடையும் சிறப்பைத் தருகிறது.

இதுதான் திருநாவுக்கரசர் வாழ்க்கை. மனிதன் குறிக்கோளாகப் போற்ற வேண்டிய வாழ்க்கை இதுதான்.

திருநாவுக்கரசர் வாழ்க்கைப் படிகளை ஆராய்ந்துணர்ந்து கடந்து சென்றவர். அவர் பாடிய ஒரு பாடல் வாழ்க்கையின் குறிக்கோளை உண்மையாக விளக்குகின்றது.

> 'கனியினும் கட்டி பட்ட கரும்பினும்
> பனிமலர்க் குழல்பாவை நல்லாரினும்
> தனிமுடி கவித்தாளு மரசினும்
> இனியன் நல்லன் இன்னம்பர் ஈசனே'—தேவாரம்

# கல்லும் சொல்லாதோ கதை—2

சி. வேலாயுதம்

பூமி உருப்பெற்று 200 கோடி ஆண்டுகள் ஆயின என்பது பூவியல் நூலின் ஒரு முடிபு. ஆனால் இப்பெரிய கால அளவை நம் மனக்கண்ணாலும் காணமுடியவில்லை. நேற்று, முந்தியநாள் என்ற கால எல்லைகளை நம் மனதில் பிடிபடுவதில்லை; ஆண்டு, பத்தாண்டு, நூறாண்டு என்பன எப்படி எண்ணத்தில் பதியும்? கோடிக்கணக்கில் காலத்தைப் பேசுவது எட்டளவையாக மாத்திரமே இருக்கமுடியும்; அது மனித அறிவுக்கு அப்பாற்பட்டதென்றே சொல்ல வேண்டும்.

ஆயினும், ஒரு உதாரணத்தால், உலகந் தோன்றியது முதல் நடந்தவைகளில் நாம் அறிந்தது எவ்வளவு சிறியது என்பதை விளக்கலாம். பூ உருண்டையில் கல்லும் கடலும் தோன்றிய காலந்தொட்டு நிகழ்ந்த வரலாற்றைத் திரைப்படமாகப் பிடித்திருப்பதாக வைத்துக் கொள்வோம். அது 24 மணி நேரம் ஓடக்கூடியதெனவும் கொள்வோம். இன்று இரவு மணி 9க்குப் படம் ஆரம்பமானால் உயிர்வர்க்கமே இல்லாத காலத்திய வரலாறு நாளைக்காலை 9 மணி வரையில் காட்டப்படும். தாவர சங்கமப் பொருள் ஒன்றும் இருக்காது. பெருமழையும் பெருவெள்ளமும், ஊழிக்காற்றும், பனிவீழ்ச்சியும், பூவதிர்ச்சியும், வெடிப்பும், எரிமலையும் பூமியைச் சின்னபின்னப்படுத்தும். இக்கோரக் காட்சி முடிந்ததும், கொஞ்சம் கொஞ்சமாக நீர் வாழ் தாவரமும் பிராணியும், நிலம்வாழ் தாவரமும் பிராணியும் தோன்றிப் பெருகும். நாளை மாலை $5\frac{1}{4}$ மணிக்குத்தான் குட்டியிட்டுப் பாலூட்டும் பிராணி வகைகளின் காலத்தை அடைவோம். அவைகள் பல மாறுதல் அடைந்து இறந்து, சில குரங்காகி மனிதனாகத் தோன்ற ஆரம்பிக்கும்போது மணியைப் பார்த்தால் ஆட்டம் முடிய இன்னும் பதினைந்து நிமிடங்கள்தான் இருக்கின்றதென்று தெரியும். அம்மனிதன் மிருக நிலைகடந்து திருந்தி இந்து சமவெளி நாகரிக நிலையை அடையும்போது ஆட்டம் முடிய கால் செகண்டுதான் இருக்கும். அன்றுமுதல் இன்றுவரை நடந்த ஐயாயிர ஆண்டின் நிகழ்ச்சிகள் கால்செகண்டில் ($1\frac{1}{2}$ அடி பிலிமில்) முடிந்துவிடும்.

இவ்வித நீண்டகால நிகழ்ச்சிகளை மனிதன் அறிந்ததெப்படி? கற்களே இக்கதையைச் சொல்லின. ஸ்டெனோ என்ற ஆராய்ச்சியாளர் கற்களில் ஒரு சில உருவங்களின் கீற்றுகள் இருக்கக் கண்டார். அவை ஒரு காலத்திலிருந்த தாவர சங்கமங்களின் உடலாலாயவை என்றும்,

வண்டல்மண்ணால் மூடப்பட்டு உருமாறிக் கற்களினுள்ளே கிடக்கின்றன என்றும் முடிவுசெய்தார். இவ்விதம் கற்களில் காணும் உருவங்களுக்கு Fossil என்று ஆங்கிலத்தில் பெயர். கல்மாறி என்றும் தமிழில் ஒரு மொழிபெயர்ப்புண்டு. ஆயினும் இங்கு பாசில் என்றே பேசுவோம். ஒரு நிலபாகம் நீருள் அழுந்தும்போது சீவராசிகளும் மடிய, அவற்றின் மேல் வண்டல் படிய, பின் அந்நிலம் மேலெழும்போது வண்டல் கற்கள் பாசில்களோடு வெளிவரும். அப்பாசில்களை ஆராய்ச்சி செய்து அவ்வக் கால தாவர சங்கமங்களின் தன்மையும் வளர்ச்சியும் பரப்பும் பற்றி முடிவு செய்துள்ளார்கள், ஸ்டெனுவும் அவரைப் பின்பற்றிய பூவியல் நூலாரும்.

அவர்கள் கண்ட வரலாற்றைச் சுருங்கக் கூறுவோம். உலக வரலாற்றை ஐவகை காலப் பகுதிப்படுத்திப் பேசலாம். (1) எவ்வித உயிரினமும் இல்லாத காலம். (2) உயிர் தோற்றக்காலம். (3) பழைய உயிரினக்காலம். (4) இடை உயிரினக்காலம். (5) தற்கால உயிரினக் காலம் என்பன.

எவ்வித உயிரினமும் இல்லாத காலம் இற்றைக்கு 200 கோடி ஆண்டுகளுக்கு முற்பட்டதாக 100 கோடி ஆண்டுகள் நிகழ்ந்ததாகும். அக்காலத்திய கற்கள் அனைத்தும் உருக்குக் கற்களாகையால், வண்டல் கற்களில்லை; ஆகவே பாசில்களில்லை. அக்கால வரலாறும் நமக்குத் தெரியவில்லை. பஞ்சபூதங்கள் தங்களது வேலையை மனிதத் தடை யின்றிச் செய்துவந்தன!

பின்வந்தது உயிர் தோற்றக்காலம், ஐம்பது கோடி ஆண்டுகள் நிகழ்ந்தது. இக்காலத்திய வண்டற்கற்கள் கிடைத்திருக்கின்றன. ஆகவே, வரலாறும் சிறிது கிடைத்திருக்கிறது. ஆனால் உயிர் இருந்த தாக நேரடியான ஆதாரங்கள் கிடைத்தில. இருந்தாலும் பின்வரும் காலத்தின் உயிர் மலிவைக் காணும்போது, இக்காலத்தே உயிர் தோன்றியாவது இருக்கக்கூடும் என்று முடிவுசெய்ய வேண்டியிருக் கிறது. இந்தக் கால உயிர்கள் நீர் வாழ்வனவாகத்தான் இருந்தன. நிலபாகம் தாவரங்கூட இல்லாமல், பனி, மழை, வெய்யில்களால் பாதிக் கப்பட்டு வந்தது.

அடுத்தது பழைய உயிரினக் காலம். இற்றைக்கு ஐம்பது கோடி ஆண்டுகளுக்குமுன் தொடங்கி, 35½ கோடி ஆண்டுகள் நிகழ்ந்தது. இக்காலம் தொடங்கியே நமக்கு வரலாறு சிறிது செம்மையாகக் கிடைத் திருக்கிறது. இக்கால ஆரம்பத்தில் பூமியை நீர் பெரும்பான்மையும் மூடி இருந்தது. நீர்வாழினமே அதிகம். கடற்புழு, ஸ்பான்சு, கிளிஞ்சல் மீன் முதலியவற்றின் பாசில்களும் கடற்கோரைகளின் பாசில்களுமே இக்காலத்திய வண்டற்கற்களில் காண்கிறோம். நிலப்பகுதியில் உயிரினம் இருந்ததாகத் தெரியவில்லை. தற்போதைய வட அட்லாண்டிக் கடல் பகுதியில் வடஅமெரிக்கா, கிரின்லந்து, ஸ்காட்லந்து, நார்வே-ஸ்வீடன்

முதலியன அனைத்தும் சேர்ந்த ஒரு நிலப்பகுதி இருந்தது. அந்தை வடஅட்லாண்டிஸ் என்பர் பூவியல் நூலார். அதற்குத் தெற்கில் ஒரு சலப்பகுதியைத் தாண்டி, தற்போதைய ஆப்ரிக்கா, ஆஸ்திரேலியா, தென்னிந்தியா முதலிய அடங்கிய வேறொரு நிலப்பகுதியிருந்தது. நிலப்பகுதிகள் இயற்கையால் அரிக்கப்பட்டு, வண்டல் மண்கள் ஆற்றினூடே சென்று பள்ளப்பகுதிகளில் விழுந்தன. இந்நிகழ்ச்சியை முடிவு செய்ய வந்தது ஒரு பெரிய நிலப்புரட்சி. அதன் பயனாய் வடஅட்லாண்டிஸ் நிலப்பகுதியின் தென்கிழக்குக் கரையோரம் ஒரு மலைத்தொடர் தோன்றியது. அதுவே, தற்போது ஸ்காட்லந்து, நார்வே-ஸ்வீடன், கிரீன்லந்து நாடுகளில் காணப்படுவது. வேறிடங்களிலும் மலைகள் தோன்றின. ஆனால் மற்றப் பாகங்கள் கேடின்றி இருந்தன. இப்பழைய உயிரினக்காலம் செல்லச்செல்ல உயிரினம் பரவ ஆரம்பித்தது. இக்காலத் தொடக்கத்தில் கடலிலே மட்டும் உயிரிருந்தது. நீரில் வாழக்கூடிய முதுகெலும்பற்ற மோலஸ்க்ஸ் என்னும் செதிள்மீனினமும், நண்டைச்சார்ந்த ஓரினமும் கடற்கோரைகளுமே இருந்தனவாயினும், 10 கோடி ஆண்டுகளுக்குள் நிலத்திலும் உயிர் தோன்றியது. சுரப்பான்போன்ற பூச்சிகளும் சில தாவரங்களும் உண்டாயின. இன்னும் 10 கோடி ஆண்டுகளில் முதுகெலும்பும் உட்கூடும் உடைய பிராணியான ஆதி மீனினம் தோன்றி, விரைவில் கடல்களைத் தமதாக்கின. தாவரங்களில் "பாசி" மரங்கள் தோன்ற, நிலத்திலும் பல முக்கிய வகைகளும் பரவின. ஆனால் பூக்கும் தாவரம் இன்னும் தோன்றவில்லை. ஊசி இலை மரமிருந்தது.

மேற்சொன்ன நிலப்புரட்சிக்குப்பின் பல கோடி ஆண்டுகளாகப் பூமி அரிக்கப்பட்டு, வண்டலாக நீரில் படிந்தது. அக்காலத்திய வண்டல்களினூடே அக்காலத்திய கடல் வாழ்வனவாகிய சுண்ணாம்புச் சத்தாலான கூடுடைய பிராணிகளின் எச்சங்கள் மிகுந்திருக்கின்றன. கடைசியில் நிலப்பகுதி மூன்றாக நின்றது. வடக்கே அட்லாண்டிஸ் (வட அமெரிக்கா, ஐரோப்பா) ஒரு சலசந்திதாண்டி அங்கார நிலம் (ஆசியா) அடுத்த டெதிஸ்கடல் தாண்டி கொண்டுவானா நிலம் (தென்அமெரிக்கா, ஆப்ரிக்கா, தென்இந்தியா, ஆஸ்திரேலியா). இவைகள் பூவியல் நூலார் கொடுத்த பெயர்கள். தென்பகுதியில் பனி உறைந்திருந்தது. வட அட்லாண்டிஸ் பகுதியில் ஆற்றுமுகப்பில் காடடர்ந்திருந்தது. பல கடல்கோள்களில் இவை நீருள் அழுந்திப் பெரும் நிலக்கரிச்சுரங்கங்களுக்குக் காரணமாயின. (மண்ணில் அழுந்திய மரங்களே நிலக்கரியாவன) கடைசியில் ஒரு நிலப்புரட்சி ஏற்பட்டு வடஐரோப்பாவிலும் வடஅமெரிக்காவிலும் மலைகள் தோன்றின. சில இடங்களில் மலையொடு நிலக்கரிப் பதிவுகளும் வெளிவந்து வெட்டுவதற்கெளிதாய் அமைந்தன.

இப்புரட்சியினால் நிலமும் கடலும் மிகவும் நிலைகுலைந்ததால் சில இடங்களின் சீதோஷ்ணநிலை அடியோடு மாறியதாகத் தோன்றுகிறது. வடஅமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் பாலை நிலை உண்டாகியது.

தாவரசங்கமங்களும் மாறின. இதுவரை நீர்நிலம் இரண்டிலும் வாழக் கூடிய தவளை முதலிய பிராணிகளே இருந்தன. இப்போது நிலத்திலேயே நிலைக்கக்கூடிய ஊர்வனவும் தோன்றின. இவை இருவகையாய் குளிர்ந்த இரத்தமும் அதனால் சுறுசுறுப்பின்றியும் இருக்கும் சுபாவமுடையன. பாசிமரங்களில் மறைந்தன போக எஞ்சியவை விருத்தியாகி, தற்காலத் தாவர வகைகளின் மூதாதைகளைத் தர ஆரம்பித்தன. ஊசி இலை மரங்கள் முன்னிலும் முன்னேற்றமடைந்தன.

பின்வந்தது இடை உயிரினக்காலம். இற்றைக்கு 15-6 கோடி ஆண்டுவரை இதை மூன்று பகுதியாகப் பிரித்துப் பேசுவது நல்லது. (1) ஆரம்பப் பகுதியில் (2½ கோடி) வடஅட்லாண்டிசும் டெதீஸ்கடலும் கொண்டுவானா நிலமும் இருந்தன. தென்பகுதி இப்போது பனி உறைந்திருந்திருக்கவில்லை. வடக்கே ஐரோப்பிய பூமியை மஸ்செல்காக் என்ற கடல் விழுங்கி வந்தது. நிலப்பகுதிகள் பெரும்பாலும் பாலையாயினும் காடுகளும் இருந்தன. (2) இடைப்பகுதி (2½ கோடி)யில் டெதிஸ்கடலும் வடக்கே பரவ ஆரம்பித்தது. கொண்டுவானா நிலமும் அளவில் சுருங்கி, மதகாஸ்கரிலிருந்து தொடங்கிய ஒரு ஜலசந்தியால் இரண்டாக்கப்பட்டது.

முதற்பகுதியிலிருந்த பிராணிகளுள் முக்கியமானவை ஊர்வன. பேருருவும் பல வகையும் உடைய டினோசார் என்பன கடலிலும் நிலத்திலும் இருந்தன. சில வெளவால்போல் எலும்போடிணைந்த ரக்கையுடன் பறக்கக்கூடியன. நிலம் வாழ்வன 4 அடிமுதல் 100 அடி வரைக்கும் நீண்ட உருவுடனிருந்தன. இவைகளின் கூடுகளை மேனாட்டுக் காட்சிசாலைகளில் காணலாம். இவை யனைத்தும் குளிர்ந்த ரத்தமுடைய சுறுசுறுப்பற்ற மாமிச-சாக பக்ஷணிகள்.

ஆனால் உஷ்ண ரத்தப் பிராணிகளும் தோன்ற ஆரம்பித்தன. பல்லிபோல் நீண்ட வாலும் பல்லுடைய அலகும் கொண்ட பறவைகள் இருந்தன. குட்டியிட்டுப் பாலூட்டும் பிராணிகள் தோன்றின. இவை சுறுசுறுப்பானமையால் குளிர்ந்த ரத்தப்பிராணிகளைத் தொலைத்து விட்டன.

தாவரங்களில் மரம், புல், புதர் என்ற வகைகள் ஏற்பட்டன. யாவும் பூ இடுபவையே. ஆகவே பரவுவதும் எளியதாகியது.

(3) மூன்றாம் பகுதியில் (6 கோடி) முக்கிய மாறுதல் உண்டாயின. டெதிஸ்கடல் இன்னும் அதிக இடத்தை விழுங்கலாயிற்று. சில பகுதிகளே பூமியாக நின்றன. 1. வடஅமெரிக்கா, ஐர்லந்து, கிரின்லந்து. 2. நார்வே-ஸ்வீடன், ருஷியா. 3. மத்திய அமெரிக்கா, வடதென் அமரிக்கா, தென் இந்தியா, மத்ய ஆஸ்ரேலியா. மற்ற இடங்களிலெல்லாம் கடல்மூடி வண்டல் படிந்து வந்தது. பாலூட்டு மிருகங்கள் எண்பெருக்குற்றன. ஊர்வனவற்றின் தொகை குறைந்தது. குட்டியைத்தாங்கும் பையுடையன

மிகுதியாயின. பறக்கும் பல்லியும், 70 அடி நீளக் கடல்பாம்பும், கொம்பும் கொண்டையுமுடைய ஊர்வனவும அப்போதிருந்த சில விசித்திர பிராணிகள்; ஆனால் விரைவில் மறைந்தன. தாவரங்களிலும் பெரு மாறுதல்கள் உண்டாயின. பூ இடும் மரங்களை எங்கும் காணப் பட்டன. தற்கால மரவினங்களுடன் ஒத்தன அப்போதே விளங்க ஆரம்பித்தன.

இப்பெரும் மாறுதலின் முடிவில் வந்தது ஒரு நிலப்புரட்சி. தென் அமெரிக்காவில் ஆண்டிஸ் மலையும் வட அமெரிக்காவில் ராக்கி மலையும் உண்டாவதற்கான பூமியும் நம் தென்பகுதியில் எரிமலைக் குழம்பாலான பீட பூமியும் உண்டாயின.

கடைசியில் இற்றைக்கு ஆறு ஏழு கோடி ஆண்டுகளுக்குமுன் தொடங்கியது தற்கால உயிரினக்காலம். இதில்தான் தற்போதைய கண்டங்கள் தங்கள் நிலையை அடைந்தன. டெதிஸ்கடல் இன்னும் வண்டல்களை ஏற்றுக்கொண்டே வந்தது. தாவர சங்கமங்கள் விரைவில் நம் காலத்திய நிலைக்கு மாறி வந்துகொண்டிருந்தன. ஊர்வன மிகக் குறையவும் பாலூட்டும் பிராணிகள் மலியவும் காண்கிறோம். இப் பாலூட்டிகள் எலிபோன்ற சிற்றுருவிலிருந்து பின் பருஉரு வடைந்தன. தற்கால ஆப்ரிக்கா கண்டத்தில் காணும் மிருகவகைகள் - யானை-ரைனோ சிரஸ், குரங்கு, குதிரை என்பனவற்றின் விசித்திர மூதாதைகள் தோன்றின. இவை சிறு பூசந்திமூலம் பிறநாடுகளுக்குச் சென்றிருக்க வேண்டும். பூச்சி வகைகள் எண்ணிலவாயின. கடைசியில் தோன் றியவை தேனீ, பட்டான், வண்ணாத்திப்பூச்சி ஆகியவையே. ஐரோப் பாவிலும் மேற்கண்ட மிருகங்கள் இருந்திருந்தால், அக்காலத்தில் அத்தேசம் இப்போதைவிட உஷ்ணமாயிருந்திருக்கவேண்டும். தாவர நிலைகளும் இதையே காட்டுகின்றன. ஆனால் ஆசியாவின் தாவரங் களை அந்நாடு இப்போதைவிட குளிர்ச்சியாக இருந்ததாகக் காட்டு கின்றன.

கடைசியில் ஒரு நிலப்புரட்சி; டெதிஸ்கடல் மறைந்தது. ஆல்ப் மலையும் இமயமலையும் பிறந்தன. ஆண்டிஸ் ராக்கிமலைகள் தோன்றின. ஆசியாவின் கீழ்கரை ஓரத்தில் பல எரிமலைத்தீவுகள் கிளம்பின.

பின் மனிதன் தோன்றினான். குரங்கிலிருந்தென்பதே பூவியல் நூல் முடிபு. எங்கு எப்படி என்பது இங்குக்கூற இடமில்லை.

(தொடரும்)

ற்பனைச் சித்திரம்

# ஸ்ரீமாந் — பரந்த நோக்கம்

'நச்சுமுறி'

*பின் வருவன, த்ராவிட பாஷாபிவிருத்தி ஸம்மேளனத்தின் பத்திரிகையான 'பூர்வ த்ராவிடம்' இதழ்களில் உள்ளன :*

## 1929

லோக ஸம்ரக்ஷணார்த்தம் அவதாரம் செய்தருளிய மஹான்கள் இட்ட பிச்சைதான் லோகாபிவிருத்தி என்று சொன்னால் கிஞ்சித்தும் அவ்வாக்கிலே அஸத்யம் இல்லை. கேவலம் வாஸ்தவம் என்பது தவிர ப்ரதிவாத ப்ரதிவாசகங்களுக்குக் கடுகுப் பிரமாணம் கூட ஸ்தானமில்லை. லோகத்தை உஜ்ஜீவிக்க அவதரிக்கிற மஹான்களை வெகுவாகப் பாகுபாடு செய்யலாம். மத ஸ்தாபகர்கள், கலா விற்பன்னர்கள், விக்ஞான சாஸ்திரிகள், கவிதா ஸிரோன்மணிகள் ஆகியோர் அவருள் ஒருசிலர். இப்படிப்பட்ட மஹான்களின் அவதார மஹிமையால்தான் ஸர்வ தர்ம நிர்மூல யுகமாகிய இந்தக் கலியுகத்திலும் லோகமானது இயங்கி வருகிறது. இதே கருத்தைப் பூர்வ திராவிட பொக்கிஷமாகிய புறநானூற்றில் கூடக் காண முடிகிறது.

உண்டா லம்ம இவ் உலகம்
இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும்
தனக்கென வாழா நோன்முட்
பிறர்க்கென வாழுந ருண்மையானே

இந்த அருமையான தத்வத்தை உணரமாட்டாத சில நவீன தமிழர்கள்.

'யாதுமூரே யாவருங் கேளிர்'

என்ற கவிதாமணியை ரஸிக்க மாட்டாமல் எரிக்கப் பார்க்கின்றனர். என்னே அவர்தம் மௌட்டிகம்! விசால நோக்கமே வியனுலக விருத்திக்கு மார்க்கம் என்ற பழந்தமிழ் லக்ஷ்யத்தை அவமதிக்கும் தமிழர்களுக்குத் தமிழ் வித்வான்களாயுள்ளவர் புத்தி புகட்டுவார்களாக!

## 1930

பாரத தேசத்தின் பூர்விக சரித்திரத்தைப் பயில்வாருக்கு ஸம்ஸ்கிருதத்தின் கைவல்யஸ்திதி புலப்படாமற் போகாது. குமரி தீர்த்தம் தொட்டு இமய பர்வத பரியந்தம் வாழுகிற பாரத ஸமுதாயத்துக்கும் இந்திய நாகரிகத்துக்கும் ஜீவநாடியாக இருப்பது தான் ஸம்ஸ்கிருதம் என்ற தேவ பாஷை. ஸம்ஸ்கிருத பாஷைக்குள் காம்பீர்யமே அலாதியான கௌரவம் உடையது. எந்த பாஷையோடு ஸம்ஸ்கிருதத்தைக் கலந்தாலும் அந்த பாஷைக்கு

ஒரு தனிசோபை உண்டாகிறது. உதாஹரணமாக நம் தமிழ் பாஷையையே எடுத்துக் கொள்ளலாம்.

உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு

என்றெல்லாம் கடுநடையும் ஸ்ரமநாதமும் கொண்ட பழந்தமிழோடு ஸம்ஸ்கிருதம் விரவப் பெற்ற பிறகு லளிதாதி லாவண்யங்கள் தமிழுக்கு ஏற்பட்டன என்பதை எந்த வித்வானும் ஏற்றுக் கொள்வானல்லனோ? ஆனல், தற்காலத்தில் தனித் தமிழென்று பேசுவார் ஒருசிலர் எழுந்துள்ளனர். அவர்தம் பேதைமைக்கு ஸாக்ஷாத் பகவானே அனுதாபங் காட்டுங் கடப்பாடுடையன். பரந்த நோக்கின் ஸ்லாக்கியங்களை சிந்தனு சக்தியால் புடமிடாது குறுகிய நோக்கோடு உழல்வார்தாம் தனித் தமிழ் என்று கூச்சலிடுவர்.

## 1939

வடமொழிப் பிரயோகங்களை திரஸ்கரிக்க வேண்டுமென்ற வாதத்தினை ஏற்றுக்கொள்ளுதல், புதுமை வாழ்வு வேண்டாமென்று கூறுதலை நிகர்க்கும். தினை தினை வளருகின்ற பாஷை எதுவாயிருந்தாலும் பிற பாஷைப் பதங்களைப் பிரயோகிப்பது மிகமிக இயற்கையேயாம். பாஷாபிவிருத்தியில் நாட்டங் கொண்டார்க்குப் பரந்த நோக்கம் அத்தியாவசியமானதாகும். பரதேசிப் பதங்களெல்லாம் தள்ளிவிட்டால் தமிழ் பாஷையானது தனது சுந்தர ரூபத்தை இழக்க நேரிடும். ஸம்ஸ்கிருத பாஷையிலிருந்து புராணங்களென்ன, அலங்கார சாஸ்திரங்களென்ன, பாட்டியல்களென்ன— இவையெல்லாம் பிறமொழிக் கலப்பினுல் தமிழுக்குக் கிடைத்த பாக்கியமல்லவோ? திசைச் சொற்களைத் தொகுத்துக் கூற வந்த இலக்கண வித்வான்களெல்லாம் 'வடசொல்' என்று சிறப்பாக விதந்து கூறியதை இங்கே கவனிக்க வேண்டும். தமிழர்களிடையேயுள்ள குறுகிய புத்தி தேய்ந்து விசாலபுத்தி விருத்தியாவதற்குத் தமிழ் மாதா கிருபை புரிவாளாக!

## 1942

தமிழ் நாட்டின் எதிர்காலத்தை நினைக்கிற பொழுது நெஞ்சம் புண்ணுகிறது. அந்நிய பாஷைப் பதங்கள் ஒன்றுமே கூடாது என்று பேசுவோர் கருத்து நாட்டிலே ஆதிக்கம் பெறுகிறது. பரந்த நோக்கோடு—தமிழை வளர்க்கும் எண்ணத்தோடு—ஸேவை புரிகிறவர்களை இன்றைய தமிழ் ஜனங்கள் நிந்திக்கிறார்கள். தமிழே வடமொழியிலிருந்து ஜனித்தது என்று ஆராய்ந்து வெளியிட்ட ப்ரஹ்மஶ்ரீ உச்சிக் குடுமி கனபாடிகளை மதிப்பார் இக் காலத்தே இலராயினர். அதுதான் ஒழிகிறது என்றால் பிரமஶ்ரீ அப்பளாக் குடுமி சாஸ்திரிகளின் வாக்கை மதிப்பவர்களாவது இருக்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. இந்த மாதிரியான மகா மேதைகளையெல்லாம் அவமதிக்கிற இந்தத் துரதிருஷ்டம் பிடித்த தமிழ் தேசம் உய்யும் மார்க்கம்

என்னவென்று தெரியவில்லையே! பழந்தமிழரின் விசால நோக்க மெங்கே போயிற்றோ!

## 1944

கலைச் சொற்கள் தமிழில் வேண்டுமென்று கேட்பதைப் பார்த்தால்கேவலமாகப் படுகிறது. அகில பாரதத்துக்கும் அஸ்தி வாரமாயுள்ள ஸம்ஸ்கிருத பதங்களை அமைத்துக் கொள்வ தல்லவா சிறப்புடையது? பழைய இலக்கணத்தில் உள்ள பகுதி, விகுதி முதலிய சொற்களெல்லாம் வடமொழியல்லவோ? பிரமஸ்ரீ அப்ளாக்குடுமி சாஸ்திரியாரின் அருந்தவப் புதல்வர் ஸ்ரீ சம்பத் கண்டுபிடித்த பதங்களையெல்லாம் தமிழர்கள் வெறுக்கிறார்கள். தமிழ் நாட்டுக்குப் பெரிய கேடு ஸம்ப விக்கப் போகிறது என்றுதான் தெரிகிறது. 'விநாஸகாலே விபரீத புத்தி' என்ற வாக்கு ஸதய வாக்கல்லவா? பரந்த நோக்கத்தைப் பறக்கவிட்ட தமிழர் நிலை பரிதபிக்கத்தக்கது!

## 1946

மொழி ஆராய்ச்சித் துறையிலே திராவிட பாஷைகளைவிட வடமொழியே முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. சமஸ்கிருதத்தின் அகிலத்துவத்தை நோக்க அதற்களிக்கப்பெற்ற முக்கியத்துவம் நியாயமானதே. ஆயினும் தமிழ் முதலிய திராவிட பாஷைகளையும் ஆராய்ச்சி செய்யத்தக்க வண்ணம் விரிவான வசதிகள் செய்யப்படவேண்டும். இந்த இடத்திலே தமிழர்களுக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விழைகிறேன். தமிழ் என்று தோன்றிற்றோ அன்றைக்கே வடமொழியும் தோன்றிற்று. இன்னும் தீட்சண்யமாய்க் கவனித்தால் தமிழானது ஸம்ஸ்கிருதத்துக்கு ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறது. இதை மனசிலே நிலைக்கச் செய்து தமிழர்கள் விசாலநோக்கம் பெறுவார்களாக! தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பரந்த நோக்கம் துணை போவதாக!

## 1947

தமிழ்நாடு விழித்துவிட்டது. தமிழுக்கு மகத்தான எதிர்காலம் இருக்கிறது. தமிழ் நாட்டிலே பிறந்த சிலர் தங்கள் பாஷை தமிழாயிருக்கவும், வேறு ஏதோ ஒரு மொழிக்குக் கடமைப்பட்டவர்களாகத் தங்களைக் கருதிக் கொள்கிறார்கள். இது மிகவும் விசனிக்கத்தக்கது. சம்ஸ்கிருதம் உன்னதமான பாஷைதான். இருந்தாலும் அது எவருக்கும் தாய் பாஷையன்று. உண்மை இப்படியிருக்கச் சிலர் சம்ஸ்கிருதமே தங்கள் தாய்மொழி என்று எண்ணிக்கொண்டு தமிழை உதாசினம் செய்கின்றனர். சம்ஸ்கிருதப்பதங்களைப் பிரயோகித்து எழுதுவதே கவுரவமென்று இவர்கள் கருதுகிறார்கள். சம்ஸ்கிருத பதங்களை நீக்கிவிட வேண்டுமென்று யாரும் சொல்லவில்லை. தமிழ்மரபுக்கேற்ற வடிவத்திலே எழுதவேண்டும். அவ்வளவுதான். ரூபம் என்று எழுதக்கூடாது, உருவம் என்று எழுதவேண்டும். சாயா என்று எழுதாமல் சாயை என்று எழுத

வேண்டும். தமிழர்கள் ரொம்பவும் விசால புத்தியுடையவர்கள். அந்நியர்களைத் துவேஷிப்பது அவர்கள் இயற்கையன்று. பரதேசிகளின் க்ஷேமத்திலேயே தங்கள் க்ஷேமத்தைக் காண்பது தமிழர்களின் பண்பாடு. தமிழர் நாகரிகத்தின் ஜீவநாடியே பரந்த நோக்கம்தான். இதை உணர்ந்து தமிழ் நாட்டுப் பிராமணர்கள் தக்கவண்ணம் நடந்துகொள்வார்களாக. ஆதி காலந்தொட்டு இது காலபரியந்தம் பிராமணோத்தமர்கள் எத்தனையோ பேர் தமிழ் பாஷாபிவிருத்திக்குச் சேவை செய்திருப்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

## அறிமுகம்

மேலே கண்டவை ஸ்ரீமான் பரந்த நோக்கம் என்ற தமிழ்ப் பேரறிஞரின் பொன் (புண்) எழுத்துக்கள். தமிழரின் புன்மைக்குப் பெரிதும் வருந்தி வளர்தமிழாக்கி விட அரும்பாடுபட்ட தமிழ்ப் பெரும்புலவர். அந்தணர் அடி அருச்சனையே அன்னை அருந் தமிழுக்கு ஆக்கம் தருமென அறிந்த அறிஞர் பெருமான். அவர்களுக்கேற்ற வண்ணமெல்லாம் ஆராய்ச்சியுரைகளெல்லாம் தீட்டித் தீட்டி அரும்புகழ்பெற்ற அண்ணல். பல்கலைக் கழகம் என்ற தொடரில் குறுகிய நோக்கத்தையும் ஸர்வ கலாசாலை என்ற தொடரில் பரந்த நோக்கத்தையும் பண்புறக் கண்ட ஞானசிகாமணி. வள்ளுவர் பழங் காலத்தவராய் விட்டால் புதுமை யுலகில் இடமிராதே என்றெண்ணி அவர் தோற்றத்தை மிகப் பிற்காலத்துக்குக் கொணர்ந்து விட்ட பீடுடையாளர்...... இவ்வாறாக அருந் தொண்டுகள் பல ஆற்றிய இப் பெருந்தகையினர் தொண்டு வாழ்க! அவர் வாழ்க! நன் வாழ்க! வாழ்க!

## எச்சரிக்கை

தமிழர்கள் விழிப்புடன் வாழ்க! கற்பனையில் வந்த ஸ்ரீமாந் பரந்த நோக்கம், காட்சியில் திருவாளர்களாக உலவாவண்ணம் விழிப்புடன் வாழ்க! காலத்துக்கேற்ற கோலம் புனைந்து கேள்போல் தோன்றி உலவுவர் இனங்கண்டு தமிழினம் வாழ்க!

நஞ்சன்கூடு பல்பொடி
I.D.L.61; மெடிகேடட்
I.D.L.21 ச்யாவனப்ராச சுவாசகோச டானிக்
I.D.L.38. ஆல்மன்டைன் பலவிருத்தி, வீர்யவிருத்தி
I.D.L.72. ஹீமாடோன் ரக்தகோச டானிக்
வியாதி விபரம் எழுதித் தபால்மூலம் சிகிச்சை பெறலாம்.

# உள்ளும் புறமும்

ம. இராதாகிருஷ்ணப் பிள்ளை

நகரத்திற்கப்பாலுள்ள காட்டில் ஒரு மலை. அம் மலையுச்சியில் ஓர் தனி மாளிகை. அங்கே ரசாயன ஆராய்ச்சியும் விஞ்ஞான ஆராய்ச்சியும் நடத்திவந்தார் சதாநந்தர். அவருடைய ஆய்கூடத்தில் ஒரு பூதமும் பிரவேசித்தது கிடையாது. ஆனால் மனிதரின் தொடர்பே அவருக்கில்லை என்று கூறமுடியாது. ஏனெனில் நகரத்திலுள்ள பிரபல பிரபுக்களின் மைந்தர்கள் எழுவர் அவரிடம் படித்து வந்தார்கள். சதாநந்தர் அவர்களுக்குத் தத்துவ நூல்களைப் போதித்து வந்தார். ரஸவாதம், மந்திரம் முதலிய ஆராய்ச்சியும் சதாநந்தர் நடத்தி வந்தார். ஆனால் இவற்றைத் தமக்குள் இரகசியமாகவே அவர் நடத்தி வந்தார்.

ஒருநாள் சதாநந்தர் மாணவர்களைத் தம்முடைய இரகசிய அறைக்கு அழைத்தார். இது அவர்கள் ஆவலைக் கிளப்பி ஆச்சரியத்தை அதிகரித்தது. குருவின் அறைக்குள் நுழைந்ததும் அவர்கள் ஆச்சரியப்படக் கூடிய எந்த பொருளையும் அங்கே காணவில்லை. ஒரு மேஜையின்மீது மாத்திரம் ஏழு கிண்ணங்கள் வைக்கப் பட்டிருந்தன. அவற்றில் பளிங்கு போன்ற தெளிவான நீர்மாத்திரம் இருந்தது.

என் அன்பிற்குரிய மாணவர்களே, இயற்கையின் அற்புத சக்திகளை கண்டறிய நான் பெருமுயற்சி செய்தேன். பெரிய மகான்களும், ரிஷிகளும் கண்டறிய முயன்ற இரகசியங்களைக் கண்டு பிடிக்க முயன்றேன். நேற்றுவரை எனக்கு வெற்றி இல்லை எனக்கு முன் முயன்றவர்களைப்போல் தான் நானும் பாடுபட்டுப் பலனடையாமலிருந்தேன். இப்பொழுதும் என் வெற்றி அரை வெற்றித்தான். பொன் செய்யும் மருந்தை நான் இன்னுங் கண்டு பிடிக்கவில்லை. இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் மருந்தையும் நான் கண்டு பிடிக்கவில்லை. ஆனால் உயிரோடிருப்பவரைச் சிரஞ்சீவியாக்கும் மருந்தைக் கண்டு பிடித்து விட்டேன் என்று கூறி நிதானமாக அவர்கள் முகக்குறிகளை ஆராயலானார்.

சதாநந்தர் கூறியதை அனைவரும் நம்பினார்கள் என்று முகக்குறியால் விளங்கியது. அவர்கள் முகத்தில் வியப்பும் தோன்றியது. அந்த இரகசியம் எப்படியும் தங்களுக்குக் கூறப்படும் எனறே அவர்கள் எண்ணினார்கள்.

'நீங்கள் விரும்பினால் அது உங்களுக்குக் கூறப்படும்' என்று பீடிகை போட்டார் சதாநந்தர்.

'எங்கள் விருப்பத்தைப் பற்றிச் சந்தேகமே வேண்டியதில்லை' என்று ஒரே முகமாக அனைவரும் கூறினார்கள். சதானந்தர் மேலும் பேசத்தொடங்கினார்.

'இதை அறிந்து கொள்வதால் நன்மையும் உண்டு; தீமையும் உண்டு. இதை அறிந்து கொள்ள முக்கிய நிபந்தனை ஒன்று உண்டு. அந்த நிபந்தனை அனுவசியமாகக் காணப்படலாம். ஆனால் நிபந்தனையை வற்புறுத்துபவன் நானல்ல. எனக்கு இரகசியத்தைத் தெரிவித்த அமானுஷிய சக்திகளின் விருப்பப்படி நான் நடக்க வேண்டும். இந்த அறிவை நான் என் சொந்த நலனுக்காக உபயோகப் படுத்த விரும்பவில்லை. கடந்த என் எண்பது வருடவாழ்க்கையை நோக்கும்போது என் வாழ்நாட்களைக் குறுக்கிக்கொள்ள வேண்டுமென்றுதான் எனக்குத் தோன்றுகிறதே யொழிய வளர்த்த விருப்பமில்லை. உங்கள் இருபது வயது வாழ்க்கையிலும் நீங்கள் இதே அனுபவத்தைத் தான் அடைந்திருப்பீர்கள்' என்றார்.

வாழ்க்கை அநித்தியமானதென்றும், ஆடம்பரமும் வியர்த்தமும் பொருந்தியதென்றும் கூறியிருப்பார்கள் அவர்கள். ஏனெனில் அவர்கள் குரு போதித்த தத்துவமே அது. ஆனால் பேச்சளவில் அதை ஒத்துக்கொண்டார்களே யொழிய செயலளவில் அதைக்காட்ட அவர்கள் தயங்கினார்கள் என்பது சதானந்தருக்குத் தோன்றிற்று. அவர்கள்எதையும் செய்யத் தயாராயிருப்பதாகவே குருவுக்குத் தெரிவித்தார்கள்.

'அப்படியானால், இப்பொழுது நிபந்தனைகளைப் பற்றிப் பேசுவோம்' என்றார் சதானந்தர்.

நீங்கள் ஒவ்வொருவரும் துணிந்து இந்தப் பானங்களில் ஒன்றைப் பொறுக்கி எடுத்து உடனே பருகிவிட வேண்டும். இவற்றில் ஒன்றுதான் சிரஞ்சீவி மருந்து. மற்ற ஆறும் கொடிய பாஷாணங்கள். அவற்றிற்கு வைத்திய புத்தகத்தில் முறிப்பு மருந்தே கிடையாது. முதல் மருந்தை அருந்தியதும் உடல் எரிந்து உடனே சாம்பலாகிவிடும். இரண்டாவது மருந்து உடம்பைப் பனிக்கட்டிபோல் உறைய வைத்து ரத்த ஓட்டத்தை நிறுத்திவிடும். மூன்றுவது மருந்து வலிப்பை உண்டாக்கி மரணத்தைக் கொடுக்கும். நான்காவதை உண்பவன் இடியால் தாக்குண்டவன் போல் உடனே கீழே விழுந்து இறந்துவிடுவான். ஐந்தாவதை உண்பவன் நித்திரையிலாழ்ந்து இறந்துவிடுவான். ஆறுவது திரவத்தை உண்பவன் தலைமயிர் உடனே கொட்டிவிடும். அவன் தோல் உடம்பிலிருந்து உரிந்து தூர் மரணத்தைத் தரும். ஏழாவது கிண்ணத்தில் தான் சிரஞ்சீவி மருந்து இருக்கிறது. ஆகவே மேலும் சிந்திக்காமல் ஏக காலத்தில் மேஜைமீது உங்கள் கையை நீட்டிக் கிண்ணங்களை எடுத்துப் பானங்களை அருந்துங்கள்! பின்னால் நடப்பது உங்கள் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது' என்று கூறினார்.

மாணவர்கள் ஒரு நிமிடம் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டார்கள். ஆசிரியர் ஒரு வேளை வேடிக்கைக்காகக் கூறினாரா என்று மாணவர்கள் மனதில் ஓர் ஐயம் தோன்றியது. ஆனால் அவர் முகம் சாந்தமாகவே இருந்தது. அவர்கள் கிண்ணத்தை ஜாடையாக ஆராய்ந்தார்கள். ஆனால் அவற்றில் ஒன்றுக்கொன்று வித்தியாசம் காணவில்லை. எல்லாக் கிண்ணங்களில் உள்ள திரவங்களும் நிறமற்றனவாகவும் தெளிவாகவும் தோன்றின.

' இன்னுமா யோசனை ? இதுவரை உங்களில் அறுவரை நான் பிணமாக வல்லவா கண்டிருக்க வேண்டும். ஏன் தயங்குகிறீர்கள்?' என்றார் சதாநந்தர்.

மயங்கி நின்ற அவர்களை இவ்வார்த்தைகள் செயலுக்குத் தூண்டவில்லை. அவர்களுள் தைரியசாலிகளான இருவர் மேஜையின்மீது கைவைக்கொண்டு போனார்கள். ஆனால் மற்றவர்கள் தங்கள் உதாரணத்தைப் பின்பற்றுதிருக்கவே அவர்களும் பின்னிடைந்தார்கள்.

அவர்களுள் ஒருவன் குருவை நோக்கிப் பேசத் தொடங்கி, ' ஐயனே, அனித்தியமான இந்த தேகத்தை நான் பெரிதாகக் கருதவில்லை. ஆனால் என்னையே நம்பியிருக்கும் என் தாய் ஒருத்திக்காகத்தான் நான் யோசிக்கிறேன் ' என்று கூறினான்.

இரண்டாமவன், 'எனக்கு மணமாகாத தங்கை ஒருத்தி இருக்கிறாள். அவளைக் காப்பாற்றும் பொறுப்பு என்னுடையதாயிற்றே' என்றான். 'எனக்கு பிராணநேசன் ஒருவன் இருக்கிறான். அவன் துன்பத்திலிருக்கிறான். அவனைக் கைவிடுதல் தவறாகும்' என்றான் மூன்றாமவன்.

' எனக்கு ஒரு எதிரி இருக்கிறான். அவன்மீது நான் அவசியம் வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது ' என்றான் நான்காமவன். ' என் வாழ்நாளை விஞ்ஞான ஆராய்ச்சியில் கழிக்க உறுதிகொண்டு விட்டிருக்கிறேன். ஏழு கடல்களின் சிநேதாஷ்ண நிலையைக் கண்டு பிடித்த பிறகே என் ஆவியை விடுவேன் ' என்றான் மற்றொருவன்.

' நீலவானில் உள்ள சந்திரனுக்குள் இருக்கும் மனிதனுடன் பேசிய பிறகே நான் உயிர் விடுவேன் ' என்றான் ஆறாமவன்.

'எனக்கு தாய், தந்தை, தங்கை நண்பன், எதிரி முதலிய எவரும் கிடையாது. எனக்கு விஞ்ஞான ஆராய்ச்சியில் விருப்பம் உண்டு தான். ஆனால் எல்லாவற்றையும் விட உயிர்வாழ எனக்கு மிகுந்த பிரியம் ' என்றான் கடைசியவன்.

' அப்படியானால் உங்கள் முடிவு...?—ஒருவரும் துணிந்து இந்த சோதனையை நடத்த முன் வரவில்லையா ? ' என்றார் சதாநந்தர்.

அவருடைய வார்த்தைகளில் பரிகாசம் கலந்திருந்தது. மாணவர்களோ வெட்கத்தால் மௌனம் சாதித்தபடி யிருந்தார்கள். அவர்

களுள் ஒருவன், 'திருவுளச் சீட்டு போட்டு வரிசையாக அவற்றை நாங்கள் குடிக்கலாமல்லவா' என்ருன்.

'எனக்கு சம்மதமே, ஆனல் ஒருவன் தவறினலும் காரியம் கெட்டு விடுமே' என்ருர் அவர்.

உடனே மாணவர்கள் வெவ்வேறு அளவுள்ள ஏழு சிறிய கழிகளைக் கொண்டு பானத்தை அணுகினர்கள். சிறிய கழி தாய்க்காக உயிர் வாழவேண்டுமென்று கூறியவனிடம் இருந்தது. அவன் மேஜையைச் திடசித்தத்தோடு பாதிதூரம் நெருங்கினன். பக்கத்தில் இரண்டாவது கழி வைத்திருந்தவனை நோக்கி, 'தாயிடம் அன்பு காட்டுவதென்பது புனிதமானது. அதைவிடக் குறைந்ததே தங்கையிடம் அன்பு காட்டுவது. எனவே நீ முதலில் இந்தக் காரியத்தில் பிரவேசி' என்ருன்.

அவனே, 'வயதான அன்னை சீக்கிரத்தில் இறந்து விடுவாள். நெடுநாள் வாழவேண்டிய அவசியமும் உனக்குக் கிடையாது. என் தங்கையோ இள வயதுடையவள். அவளுக்காக நான் நெடுநாள் உயிர்வாழ வேண்டும். ஆகவே நீயே இதை முதலில் செய்ய வேண்டியவன்' என்ருன்.

'சதாநந்தரின் சீடனை பெற்ரேர்க்குச் செய்ய வேண்டிய கடமையைப் பற்றி இப்படிப் பேசுவது' என்ருன் முன்னவன்.

நிறுத்துங்கள் உங்கள் வீண் வம்பை, முடிந்தால் நிபந்தனையை நிறைவேற்றுங்கள், இன்றேல் விட்டு விடுங்கள்' என்று மற்ற அறுவரும் கூறினர்.

இவ்வாறு கூறியதும் அந்த மாணவன் மேஜையை அணுகி முதல் கிண்ணத்தைக் கையிலெடுத்தான். அதை நெருங்கியதும் அப்பானத்தில் ஏதோ ஒரு வர்ணம் புலப்பட்டதாக அவன் கண்ணுக்குத் தெரிந்தது. உடனே அவன் அதைக் கீழே அவசரமாக வைத்துவிட்டு இரண்டாவது கிண்ணத்தைக் கையிலெடுத்தான். அப்பொழுது ஒரு பெரிய நெடி. ஜ்வாலை அவர்கள்மேல் வீசிற்று. அந்த ஏழு மாணவர்களும் இடியால் தாக்குண்டவர்கள்போல் தரைமேல் மூச்சு அற்றுத் திடீரென்று விழுந்துவிட்டார்கள்.

அவர்கள் கண் விழித்தெழுந்தபோது சதாநந்தர் வீட்டின் வெளியே யிருப்பதாக உணர்ந்தார்கள். தங்கள் நடத்தையால் ஏற்பட்ட வெட்கத்தை ஒருவருக்கும் தெரிவிப்பதில்லை என்று உறுதி கூறிக்கொண்டு தங்கள் தங்கள் வீட்டுக்குத் திரும்பினர்கள்.

ஒருவர் அறிந்தால் ரகசியம், இருவர் அறிந்தால் அம்பலம் என்பார்கள். இந்த விஷயம் ஊர் முழுவதும் பரவி விட்டது. விஷயம் அரசன் காதுக்கெட்டியதும் அவன் சதாநந்தரையும் பானத்தையும் கைப்பற்றும்படி ஆட்களை அனுப்பினன். அவர்கள் சென்று பார்த்தபோது வீடு உள்ளே தாளிட்டபடி யிருந்தது. கதவை உடைத்து உள்ளே சென்று ஆய் கூடத்தில் பார்த்தபோது சதாநந்

தார் ஓர் நாற்காலியில் வெறுப்புடன் கூடிய பார்வையோடு உட்கார்ந்த வண்ணம் காணப்பட்டார். ஆனால் அவர் ஆவி பிரிந்து விட்டது. அவருக்கு முன்னால் மேஜைமேல் ஏழு கிண்ணங்கள் இருந்தன. ஒன்று மாத்திரம் காலியாயிருந்தது. அதன் கீழ் ஒரு காகிதம் இருந்தது.

'பன்னிரண்டு வருடங்கள் முயற்சி செய்து என் ஆராய்ச்சியின் பயனாக நான் கண்டு பிடித்தது ஆறுவித பாஷாணங்களே. மனித வர்க்கத்தின் கஷ்டங்களை நிரந்தரமாக்க ஒரு கொடிய வரம் கொடுத்தேன்' என்று எழுதப்பட்டிருந்த காகிதத்தை அவர்கள் படித்துப் பார்த்தார்கள். அவற்றின் பொருள் அவர்களுக்கு விளங்கவில்லை, எனவே ஒருவரை ஒருவர் உற்றுப் பார்த்தார்கள்.

அப்பொழுது பக்கத்தறையில் ஏதோ சாமான் வீழ்ந்ததுபோல் சப்தம் கேட்டது. அங்கிருந்து ஒரு பெரிய குரங்கு குதித்துக் கொண்டும் துள்ளிக் கொண்டும் வெளிக் கிளம்பியதை அவர்கள் கண்டார்கள். இந்தக் குரங்குக்கே சதானந்தர் தமது சிரஞ்சீவி மருந்தை அளித்திருக்க வேண்டுமென்று கருதி அவர்கள் வெளியே சென்றார்கள்.

# என்று காண்போம்

ந. வாகீசன்

1. முன்னாளில் முடிசூடி இந்நா டாண்ட
மூவேந்தர் வழிவந்த தமிழ ரெல்லாம்
இந்நாளில் வடநாட்டார் சட்டத் திற்கு
இருக்கின்றார் கீழ்ப்படிந்து அடிமை போலே
சின்னாளில் அந்நிலைமை மாறா விட்டால்
சீரழியும் தமிழ்நாடு வறுமை எய்தும்
எந்நாளில் அந்தநிலை மாறுங் கொல்லோ ?
எய்தரிய தமிழரசை என்று காண்போம்.

2. கல்லாத ஒருதமிழன் இருக்க மாட்டான்
காசினியில் கற்றவர்கள் ஏசு கின்ற
பொல்லாத சாதிமுறை ஏழை செல்வர்
புல்லுருவிக் கோட்சேக்கள் கூட்டம் எல்லாம்
இல்லாத நல்லநிலை செய்ய வேண்டின்
இனிவரும்நம் தமிழரசு அதனைச் செய்யும்
எல்லோர்க்கும் நலன்விளைத்து இன்னல் போக்கும்
எம்தமிழர் நல்ஆட்சி என்று காண்போம்.

# நிலமகள் வேக்காடு

அன்று மீனுவின் திருமண நாள். அவ்வூரே ஒரு திரளாக அவள் வீட்டிற் கூடிவிட்டது. எங்கும் இசைக் கருவிகளின் இன்னிசை முழக்கம்! அச் சிற்றூரே ஒளி மயமாகப் பிரகாசிக்கிறது. பந்தலில் வாழை, கமுகுகள் நட்டிருக்கிறார்கள். தோரணங்கள் தொங்கவிடப்பட்டுள்ளன. எங்கும் பரபரப்பும், உற்சாகமும். சிறு சிறு குழந்தைகளெல்லாம் “இண்ணைக்கி மீனு அக்களுக்குக் கலியாணம், கலியாணம்” என்று குதப்பிக்கொண்டிருந்தன. அன்று ஒரு குழந்தையாவது அழவேயில்லை; அழுவதற்கு நேரமில்லை. அவைகளெல்லாம் ஏதோ ஒன்றைமென்று தின்றுகொண்டேயிருந்தன. சிற்றூர் வாசிகளெல்லாம் “மீனு, மீனு” என்று முணுமுணுத்துக்கொண்டேயிருந்தனர். குக்கிராமக் காட்சிகளையெல்லாம் கண்டு களிக்கவோ, வர்ணிக்கவோ வேண்டிய அளவு கண்ணையும் கருத்தையும் கடவுள் நமக்குக் கொடுத்திருக்கிறார், என நான் நினைக்கவேயில்லை. மணமகள் புனையா ஓவியம்போலத்தான் பாயில் அமர்ந்திருந்தாள்.

அவள் கழுத்திற்குத் தான் என்ன? ஒரு குறைவும் இல்லை. உளுத்துப்போனது அவள் கழுத்தா, உள்ளமா? அவளது உள்ளம் எதைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தது? வருகிற கணவனுக்கு அறுசுவை உணவும், அன்பு முத்தமும் அளவில்லாமல் மாறி மாறிப் பரிமாறலாம் எனப் பார்க்குப் பார்த்துக்கொண்டிருந்ததா? கழுத்திலே திகழும் பொன்னணிகளின் ஒளியிலே மின்னிக்கொண்டிருந்ததா?

நகைகள்......எத்தனை வகைத் தங்கச்சங்கிலிகள்! அவைகளெல்லாம் அவளை அழகுபடுத்த அணிவித்தவைகள், என அவள் நினைக்கவேயில்லை. எல்லாம் அடிமைப்படுத்தும் சங்கலிகள்.......தங்கமானாலும் சங்கலிகள் அல்லவா, என நினைத்தாளா? இல்லவேயில்லை. உள்ளம் உளுத்து உருச்சிதைந்து கிடந்தது. அவள் உள்ளம் சிந்தனை என்ற இயற்கைத் தொழிலையே மறந்துவிட்டது; மரத்துக் கிடந்தது.

அத்தனை அணிகலன்களும், அவளுடலொளியைப் பிரதிபலித்தன. அவளை மெதுவாக நகர்த்திக்கொண்டு வந்து மணமேடையில் அமர்த்தினர்.

மணவறைக் குறும்புகள்...... கைகளைக் கட்டுதல், கண்டபடி கேலி செய்தல். மணமகன் மீனுவின் கையைக் கிள்ளினான். பொலபொலவென்று கண்ணீர் உகுத்தாள் மீனு. அவன் கிள்ளியதன் வலியல்ல, அவளை அப்படி அழ

வைத்தது. அவளுடைய கற்பென்னும் அணிகலன் பட்டப் பகலில் பட்டவர்த்தனமாக, மேளதாள ஆரவாரத்தோடு பறிபோகிறதே.......! இதை அவளால் பொறுக்கவே முடியவில்லை.

* * * *

மஞ்சள் நீராடும் நாள். மணமகன் மீனுவின் முறைமையாளர்கள் புடைசூழ மஞ்சள்நீரை மொண்டு மொண்டு அவள்மீது ஊற்றினன். மீனு முழுதும் நனைந்தாள். மீனு மஞ்சள் நீரால் மணமகனுடன் விளையாடவில்லை. தனக்குத்தானே விளையாடிக் கொண்டாள், தன் கண்ணீரைத் தன் மேலேயே ஊற்றிக்கொண்டு.

* * * *

முதல் இரவு; அதை மணமகன் அமைதியற்ற இரவாகக் கழித்தான். இரண்டு, மூன்று, நான்கு ஆகப் பல இரவுகள் மணமகனின் மனப்புயலைக் கிளரிவிட்டன. முதலிற் கெஞ்சினன். கொஞ்சினன். பாசாங்காக அஞ்சினன். கடைசியாக விஞ்சினன். இவ்வளவு வார்த்தைகளாலும் பயனில்லை.

"இனி, கையிருக்கிறது, தக்க மரியாதைகள் செய்ய" என்று கடைசியில் அச்சுறுத்தியும் விட்டான். இப்படியிருந்தது மீனுவின் தேன் நிலவுக்காலம்! அவளடும் உணவு. அறுசுவை என்ன? அறுநூறு சுவையாகவும் இருந்திருக்கும். அவள் படிக்காததல்ல. ஒரு காதலி, தன் தன் காதலனுக்கு எப்படி உணவு தயாரித்தல் வேண்டும் என்று......

"முளிதயிர்ப் பிசைந்த
காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம்
கழாஅது உடீஇக்
குவளை உண்கண்
குய்ப்புகை கமழத்
தான்துழந்துஅட்ட,
தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன்
உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று
ஒண்ணுதல் முகனே."

(கூடலூர் கிழார்)

இது அவள் அறிந்த-உணர்ந்த பாட்டுத்தான். ஆனல்............ ஒருநாள், ஒருவாரம், ஒரு திங்கள், இல்லை. ஒன்பது திங்கள்கள்! மணமகன் முழுத்தோல்வியடைந்தான். "அறைந்தேனு பா...ர், என்று அடிக்கடி அடிக் கணக்கில் உயர்த்துவான் அந்தக் கைகளை. அந்தக் கைகள்.....!கைகளா அவைகள்....? கலப்பையும் கடப்பாறையும், கடுங்கோடரியும், மண்வெட்டியும், மரக்காலும், அரிவாளும், கொடுவாளும் பிடித்த வைகள். அவைகள் கைகளா?

அவள் என்னமோ குக்கிராமவாசி தான். அவளுக்குத் தன்னிடமிருந்த எட்டுச்சுவடிகளை எல்லாம் எடுத்து ஒவ்வொன்றாக ஓதிவைத்துச் சென்றுவிட்டார் அவளுடைய தாத்தா. அவள் வாழ்க்கையில், அந்தப் பதினறு ஆண்டுகளும் அவள் அடுப்பூதிக்

கழிக்கவில்லை. "அகநானூறும், புறநானூறும், குறுந்தொகையும், குறவஞ்சியும்" படித்தே கழித்தாள். குழந்தைகளுக்குக் குருவிப் பாட்டும், கிளிப்பாட்டும், பெரியோர்களுக்குப் பத்துப்பாட்டும் பரிபாடலும்தான் அவள் பழக்கப்படி சொல்லுவன. ஆனால் அவளை இன்று காணும் கவிஞன் ஒரு பரிவுப் பாடல் பாடவேண்டிய நிலை.

"இனிமேல் நான் உச்சிநேரத்தில் வீட்டுக்குவர உத்தேசமில்லை. உணவு கொண்டுவர வேண்டும் உழவு நிலத்திற்கு" என்று சொல்லி, ஒரு உதையும்கொடுத்து விட்டுச் சென்றுவிட்டான், அவளை உடையவன். அந்த உச்சி வெயில், எவ்வளவு உக்கிரம்? அவளுடைய உடலிற் பட்டு, எதிரொளி பெற்றுத் திகழத்தானா இந்தச் சூரியன் இத்தனை ஆசைப்படுகிறான்?

அவள்தான் வாய் திறந்து பேசுவதேயில்லையே. அந்த உள்ளத்தில்தான் அப்படி யென்ன இருக்கிறது? ஒன்றுமேயில்லை. வெம்பி வெறிச்சென்றுதான் கிடக்கிறது. நிலமடந்தையின் மேனி இவ்வளவு கொதிப்பாக இருக்கும் என்று அவள் இதுவரை கண்டதேயில்லை. நிலமகளுக்கும் மீனாவைப்போல உள்ளப் புழுக்கம் உண்டோ? இன்றுதான் காண்கிறாள். இன்றுமுதல் கண்டு கொண்டேயிருப்பாள். உழவை ஓட்டிக்கொண்டேயிருப்பான் மணமகன். தூரத்தில் அவள் வருவதைக் கவனிப்பான். ஒன்று, இரண்டு, மூன்று என ஏதோ சொல்லிக் கடைசியில் "மணி இரண்டு" என முடிப்பான். மாடுகள் மண்டியிடும், அந்தச் சாட்டையை ஓங்குவதற்குமுன். அதே சாட்டைதான், "மணி ரெண்டாகுதா, இந்தச் சோறு வந்து சேர" என்று ஒரு இழுப்பு இழுப்பான். அவளுடைய அழகில் அழகுபெற்ற அந்தக் கதிரவனும், மேகத்தில் அந்தரங்கமாக மறைந்துகொள்வான்! தொட்டதற்கெல்லாம் தப்பெடுப்பான். தொட்டதற்கெல்லாம்... ..............."பிட்டு இவ்வளவு சிறிதா" என்று சொல்வான். பட், பட்டென்று பல அறைகள். ஐந்தாறு பிட்டுகள் தின்றுவிட்டுச் செல்வான். இன்னும் ஏழெட்டுப் பிட்டுகள் கொண்டுபோக வேண்டும். இப்படி ஒரு நாளிருநாளல்ல. ஒன்பது மாதங்கள். இந்த ஒன்பது மாதங்களிலும் அவள் சுமார் ஒன்பது தடவைகள்தான், ஆனால் ஒரே, சில வார்த்தைகளைத் தான் திருப்பித் திருப்பிப் பேசியிருக்கிறாள். "வந்திருந்தாராமே, போய்விட்டாரா?" அவள் இத்தனை நாட்களும் குளித்தாள். தலைவாரினாளில்லை. மயிர்முனையை முடிந்தாள். ஆனால் மலர் சூடினாளில்லை. மஞ்சள் பூசினாளில்லை. நெற்றியையும் கண்களையும் துடைத்தாள். ஆனால் திலகமும் மையும் தீட்டினாளில்லை.

அன்றொருநாள். அவளுக்காக ஒரு உள்ளுணர்ச்சி—"இன்று அவர் வருவார், போய்விடமாட்டார்" என்று அவனும், அவளும் பிறந்து, தவழ்ந்து விளையாடும் நாள்

முதல், மண்வீடு கட்டி, அப்பா, அம்மா, குழந்தைகள் என்று குடும்பம் வைத்து விளையாடியது முதல் ஒன்றாகப் பழகி, ஒரு வட்டியில் உண்டு, உராய்ந்தவர்கள். ஆனால், விதி அவனை அவளினின்று பிரித்தது. படிக்கப் போனவன்தான், பட்டணத்திற்கு. அவளுடைய வாழ்க்கையில் எத்தனையோ மாறுதல்கள். வாழ்க்கையில் மட்டுமா? மீனுவின் ஒவ்வொரு அணுவும் உருமாறிக் கிடந்தது. தலைவாரிப் பின்னிப் பூச்சூடி மஞ்சள் பூசித் திலகமும் தரித்துக்கொண்டாள். இந்த நிலையில், அன்று மட்டும் புதிய உடை உடுத்துக்கொண்டு உணவும் உண்டாள். தெருவழியே ஒய்யாரமாக நடந்தாள். ஆனால் அவள் தெய்வத்தைத் தொழவில்லை.

அன்றும், அதே உச்சி வெயில். அந்த ஒற்றடிப்பாதை வழியாக நடந்தாள். தலையில்நான் கைந்து வெண்கலப்பாத்திரங்கள். அட-ட, என்ன ஒளி வீசுகின்றன. அவைகள்! கொஞ்சதூரம் நடந்தாள். சிற்றூர்ப் புகைவண்டி நிலையத்தையும் கடந்து சில அடி தூரங்கள் சென்றுவிட்டாள். வந்த புகைவண்டியும் கூ....உ என்ற கூக்குரலுடன் அவளைக் கடந்தோடி விட்டது.

வண்டியினின்றும் இரங்கிய ஒரே ஒரு வாலிபன். புகைபிடித்துக்கொண்டே அவளைக் கடந்துவிடும் நேரம். அவள் பக்கமாகத் திரும்பினான். அவன் ஊதிய புகை அவள் முகத்தை மறைத்திருந்தது. புகை கலைந்ததும் “ஓ... ஓ....மீ....உ....எங்கே....”......; என்ன இது” என்று உளறினான். அவளுடல் நடுங்கிற்று. அவள் பேசவேயில்லை. அவன் மேலும் பேசினான். “மீனு, என்ன சௌக்கியமா, என்ன, எல்லாம் மறந்திட்டியா.......”? என்று கேட்டுக்கொண்டே அவள் கழுத்தையும் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தான் அவ்வாலிபன். “மிகவும் இளைத்திருக்கிறாயே, உடம்புக்கு ஏதாவது” என்றான். செல்லரித்துப்போன வேரோடு நிற்கும் கொட்டைக் கொப்புபோல அசையாமல் அவள் நின்றாள். முகத்திற்கு முகம் ஒட்டும் நிலையில் ஒரு யுவனும் யுவதியும் நின்றுகொண்டு பகற்கனவு காண்கிறார்களா, என்ன? அவன் முழுவதையும் உணர்ந்துகொண்டான்.

“நான்தான் என்ன செய்ய, மீனு. நானும் உன்போலத்தான். எனக்கு இந்தத் தம்மை மறந்த தமிழர்களைக் காணும்போதே, அவர்கள் பஞ்சம், பசி, பட்டினி என்று பதை பதைக்கும்போதே. நான் இரத்தக்கண்ணீர் வடிக்கிறேன். அவர்கள், அமைந்த வாழ்க்கை இன்றி அல்லற்படும்போதே நான், ஓர் தனித்தமிழ் உலக நிர்மாணத்திற்காக உழைக்கிறேன். அதோடு படிப்பையும் விடாமல் தொடர்ந்து படித்து வருகிறேன். எல்லாவற்றையும் நான் இப்போது நன்றாக உணர்ந்துகொண்டேன். என்ன செய்வது? விதியின்படி வாழ்க்கை! எனக்கும் விடுதி உணவு உடலை உருக்குகிறது. நீயோ, நுண்மாண் நுழை

புலத்துடன் கூடிய அனிச்சத்தை ஒத்த உள்ளத்துடன் இருக்கிறாய். இந்த உலகம்.........ம். மிக மிக நல்லவர்களாயிருந்தால், இந்த உலகம் பழிவாங்காமலும், விடுவதில்லை. உ....உ....ம், மீனா, குழந்தை ஏதாவது...” என்று இழுத்தான். கோ. .வென்று கதறினாள் மீனா. அவள் வடித்த கண்ணீர், அவன் அங்கத்தை நனைத்தது. அவளுடைய உதடுகள் எங்கோ, எதிர்பாராத வகையில், அவன் கன்னத்திற் புதைந்து கிடந்தன.

சிறிது தூரத்தில்... அதோ ஒரு முரடன் ஓடிவருகிறான்! அவன் கையில் மின்னுவது பாளை அரிவாள். ஆம், ஆம், அது பாவை அறுக்கும் அரிவாள். அதோ.... ஓ அந்தக் கத்தி ஒளி வீசிப் பறக்கிறது.

இரண்டு தலைகள் உருண்டன.
விண்ணில் மேகம் திரண்டது.
கார்மேகம் – காரிருள் – புயல்.

கார்மேகம் சூழ்ந்தது ; கடும்புயல் வந்தது. ஆனால்...........மழை பெய்யவில்லை. சோனாமாரி தேவை ; ஆனால் இன்னும் மழை பெய்யவில்லை.

நிலமகளின் வேக்காடு தணிய சோனாமாரி தேவை. தலைகள் உருண்டன ; மேகம் திரண்டது. மழை...? அதுதான் காணோம்.


—o—

இந்தியாவின்
இணையற்ற
தயாரிப்பு!




ஜாப்கோ
- பவுண்டிங்க் -

ஜய பாரதம் கோ
மதராஸ் - பெங்களூர் - எர்ணாகுளம்




தமிழ்ச்சோலை :—கையெழுத்துப்பிரதி.

ஆசிரியர் வீ. து. சச்சிதானந்தம். அலுவலகங்களில் வேலை பார்ப்போர் பொழுதுபோக்குக்காகப் பல விளையாடல்களைக் கொள்வதுண்டு. இன்று அவ்விளையாட்டும், பொழுதுபோக்கும் அறிவு வழியில் திரும்பியுள்ளது. சென்னை பொதுப்பணிப் பிரிவில் (Poblic Works Department) பணியாற்றும் தமிழ் அன்பர்கள் 'தமிழ்ச் சோலை' என்ற கையெழுத்துப் பிரதியைத் திங்கள்தோறும் எழுதி வெளியிடுகிறார்கள். சிறந்த கட்டுரைகள் - கதைகள் வனப்பு மிக்க படங்கள். அவர் தம் பணி சிறப்பதாக !

தொண்டைநாட்டுத் தேவாரத்திரட்டு: வெளியிட்டோர்: கணபதி வாசகசாலையார், காமாட்சி அம்மன் கோயில் தெரு, காஞ்சி.

காஞ்சியையும், அதைச் சார்ந்துள்ள தொண்டைநாட்டுத் தலங்களையும் பற்றிய தேவாரப் பாடல்களைத் தொகுத்து வெளியிடப்பட்ட நூல் இது. மூலர் தோரப்பகுதிகளும் அடங்கியுள்ளன.

அசோன் காலத்தில் :—வெளியிடுவோர் வள்ளலார் நிலையம், 213, தங்கசாலைத் தெரு, சென்னை - 1. விலை. 0 - 6 - 0. ஆசிரியர் ஏரல் மலையப்பன்.

அசோகன் கொடியைப் பற்றியும் ஆட்சியைப் பற்றியும் பேசும் காலத்தில் எழுத்து மாற்றத்தைப்பற்றி எழுத விழைந்த ஆசிரியர் தமிழ் எழுத்துக்கள் அன்றைய நிலையில் எப்படி இருந்தன என்பதைக் காட்டி, இன்றைய எழுத்து மாறுதல் எவ்வாறு இருக்க வேண்டும் என்று விளக்குகின்றார். தமிழ் எழுத்துக்களாகிய 'ழ' 'ற' என்ற இரண்டும் வடநாட்டு மொழிகளுள் கலந்தால் அந்நாட்டு மொழிகள் இந்நாட்டில் வரலாம் என்பது ஆசிரியர் கருத்தாகக் காண்கின்றது. அசோகன் காலப் பிராமி தமிழ் மொழிகள் போல இன்றை வட தென் மொழிகள் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றார். தமிழ்நாட்டு அறிஞர்கள் இம்முடிவை மேலும் ஆய்ந்து ஆவன செய்ய வேண்டும். தமிழர் தம் மொழிப் பற்றின் தேவையை ஆசிரியர் விளக்கியுள்ளார்.

மதராஸ் சினிடோன் :—சென்னையிலிருந்து வரும் சினிமா இதழ். ஆசிரியர் T. R. S. ராகவன். அலுவலகம் 1/44 சீனிவாச புரம் இரண்டாவது தெரு, ராயப்பேட்டை. சிறந்த சினிமா விமரிசனங்களும் படங்களும் கொண்டு வெளிவருகிறது. மாதம் இருமுறை. தனிப்பிரதி அணா 2/- ஆண்டு சந்தா ரூ. 3/-

# முத்தம்

வித்துவான் மொ. அ. துரை அரங்கசாமி, B. O. L., M. O. L.

என் அருந் துணைவியும், யானும் ஒருநாள்
மாலை வேளையில், மயானக் களத்தில்,
வழியே செல்கையில், வாடிய காம்புடைக்
கொத்துகள் கொய்தோம் ; குலவிய எம்மிடை
ஊடல் எழுந்தெம் உறவைக் குலைத்தது ;
ஊடற் காரணம் உணர்த்தல் ஆற்றேன் !
ஆனால் ஊடல் அகன்றது நொடியில் ;
முத்தம் மாறினோம் ; முகிழ்த்தனம் கண்ணீர் !
ஊடலின் பின்னர் உற்றநல் உறவு
வாழிய பெரிதே ! வாழிய பெரிதே !
காதலர் இருவர் கலங்கி ஊடுதல்
காதற் பெருக்கினைக் கணக்கிடல் அரிதாய்
ஆக்கும் திறன் தான் அதிசயம் ! ஆதலால்,
ஊடல் இனிதே ! ஊடலின் பின்னர்
முத்தம் மாறுதல் மூவா மருந்தே !
ஊடல் மாறின உண்மை கூறுவல் ;
சிறிய கல்லறை சேர்ந்தனம் யாமே ;
கல்லறை அதன்மேல் கண்ணீர் விடுத்தோம் ;
காதல் மலர்ந்தது ; கருத்தொருமித்தது
முத்தம் கொடுத்தேன் ; முத்தம் கொடுத்தாள் ;
மழலை பேசிய மதலை எம்மிளஞ்
சிறுவன் சிலநாள் சிறுநகை கூட்டிச்
சில்லாண்டு முன்னர்ச் சிறிய கல்லறை
என்றும் உறங்கும் இடமாக் கொண்டனன்
கல்லறை முன்னுறக் கண்டதும்
முளைத்தது கண்ணீர் ! முத்துமாரினமே !

---

லார்டு டென்னிசனைத் தழுவியது. பொன் நிதி : 723.

---

Printed by V. Rajammal at Sadhu Press, 12, Ganapath Mudali Street, Royapettah. Published by G. Ramasami, 34 Vaithiyanatha Mudali Street, Chetput, Madras 10.
Editor: A. M. Paramasivanandam, B.O.L., M.Litt. M.R.A.S.


கன்னியர் கருத்துக்கேற்ற
நகைகள்
காதலர்
வாழ்வுக்கேற்ற
தேவைகள்!
. P.A. ராஜு செட்டியார் & பிரதர்
போன்: ௨௬௮ — கோயம்புத்தூர் - தந்தி - ராஜா